வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 05.03.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 65 பக்கங்கள் : 12




# மண்ணுக்கு பதில் திருநீறு தூவி சாந்தனின் வித்துடல் அடக்கம்!

## இறுதி நிகழ்வில் ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

வடமராட்சி, மார்ச் 05

சாந்தன் என்று அறியப்பட்ட தில்லையம்பலம் சுதேந்திரராஜாவின் வித்துடல் நேற்று எள்ளங்குளம் இந்து மயானத்தில் விதைக்கப்பட்டது. இதன்போது, பிடி மண்ணுக்கு பதிலாக திருநீறு தூவப்பட்டது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 32 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு விடுதலையான



சாந்தன் கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி சென்னையில் காலமானார். அவரின்

11

## தமிழ்நாட்டில் துன்பத்தில் ஈழஅகதிகள்

# தமிழ் எம். பிக்கள் முதல்வருடன் பேசி தீர்வு பெற்றுக்கொடுக்க வேண்டும்!

## தமிழ்நாடு சட்டத்தரணி புகழேந்தி

வடமராட்சி, மார்ச் 05

தமிழ்நாட்டில் வாழும் ஈழத் தமிழ் அகதிகள் பெரும் துன்பங்களுக்குள் வாழ்கின்றனர். அவர்கள் தொடர்பில் இங்குள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாட்டின் முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுடன் பேசி அந்த மக்களுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் - என்று தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்த சட்டத்தரணி புகழேந்தி தெரிவித்தார்.

சென்னையில் காலமான சாந்தனின் இறுதி ஊர்வலம் நேற்று அவரின் சொந்த இடமான வடமராட்சி - உடுப்பிட்டியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் அஞ்சலி உரை ஆற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் வாழும் ஈழத் தமிழ் அகதிகள் அங்கு அடிப்படை வசதிகளற்ற நிலையில் வாழ்கின்றனர். அத்துடன், பல்வேறு சிரமங்களையும் எதிர்கொண்டு வருகின்றனர். அந்த மக்களுக்கான வசதி வாய்ப்புகள் இந்திய மத்திய அரசால் ஏற்படுத்திக்

11

# இலங்கையின் புதிய சட்டங்கள் கவலையை ஏற்படுத்துகின்றன



## கோர் நாடுகள் தெரிவிப்பு

- ஒன்லைன் காப்பு சட்டத்தால் அனைத்து வெளிப்பாடுகளையும் குற்றமாக்கலாம்
- பயங்கரவாத தடை சட்டத்தை நீக்குக
- வட, கிழக்கில் காணி அபகரிப்பு பதற்றம்

ஜெனிவா, மார்ச் 05

**மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் குடிமை வெளி என்பன தொடர்பான புதிய சட்டங்கள் மற்றும் சட்டத் திருத்தங்கள் கவலையை ஏற்படுத்துகின்றன.**

**- இவ்வாறு மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான கோர் நாடுகளின் கூட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

மனித உரிமைகள் பேரவையின் 55ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் நடக்கிறது. இதில், நேற்று இலங்கை விடயம் தொடர்பில் ஆராயப்பட்டது. இதன்போது, இலங்கை விவகாரம் தொடர்பில் கையாளும் கோர் நாடுகளான கனடா, மலாவி, மொண்டினீக்ரோ, வடக்கு மசிடோனியா, ஐக்கிய இராச்சியம், மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் கூட்டு அறிக்கையை ஐக்கிய இராச்சியத்தின் துணை வதிவிடப் பிரதிநிதி ரீட்டா பிரெஞ்ச் வாசித்தார்.

அந்த அறிக்கையில், நிகழ்நிலை (ஒன்லைன்) பாதுகாப்பு சட்டம் இணைய தகவல் தொடர்புகளை கடுமையாக கட்டுப்படுத்தும். இது கிட்டத்தட்ட அனைத்து வகையான வெளிப்படுத்துகைகளையும் குற்றமாக்கக்கூடிய சாத்தியக் கூறுகளை கொண்டுள்ளது. மனித உரிமைகளை கட்டுப்படுத்தும் இந்தச் சட்டத்தை அர்ப்பணிப்புகளுடன் திருத்தங்களை செய்யுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்.

பயங்கரவாத

11

# மின்சாரக் கட்டணம் 21.9 வீதம் குறைந்தது

கொழும்பு, மார்ச் 05

மின்சாரக் கட்டணத்தை நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 21.9 சதவீதத்தால் குறைக்க இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கை மின்சார சபை முன்வைத்த யோசனை மற்றும் செலவுகளுக்கு அமைய 2009ஆம் ஆண்டு 20ஆம் இலக்க மின்சாரத்துறை சட்டத்தின் 30ஆவது பிரிவு மற்றும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் மானியங்களுக்கு அமைவாக கண்காணிப்பு மற்றும் மீள்பரிசீலனைகளுக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

11

# எரிபொருட்களின் விலைகள் குறைப்பு

## 92 ரக பெற்றோலுக்கு இல்லை

கொழும்பு, மார்ச் 05

நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும்வகையில் எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டன. எனினும், 92 ஒக்ரைன் ரக பெற்றோல், ஓட்டோ டீசலின் விலைகள் குறைக்கப்படவில்லை.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் அறிவிப்பின்படி, 95 ஒக்ரைன் பெற்றோல் லீற்றர்

11

# 62 புதிய சட்டங்களை சபையில் நிறைவேற்ற ஜனாதிபதி திட்டம்!

கொழும்பு, மார்ச் 05

நாட்டில் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக கடந்த 14 மாதங்களில் 42 புதிய சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், மேலும், 62 புதிய சட்டங்களை, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு தாம் எதிர்பார்த்துள்ளதாகவும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற சட்ட சீர்திருத்தம் தொடர்பாக வட்ஸ் நியூ என்ற இளம் சட்டத்தரணிகளுடனான கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே

11

# ரஷ்யா சென்ற இலங்கையர்களை இராணுவத்தில் இணைக்க முயற்சி

## வெளிநாட்டு வேலைவாய்ப்பில் மோசடி

கொழும்பு, மார்ச் 05

வேலை வாய்ப்புகளுக்காக ரஷ்யாவுக்கு அனுப்பப்பட்ட இலங்கையர்கள் சிலரை இராணுவத்தில் இணைக்ளும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரஷ்யாவில் வேலை வாய்ப்புகள் இருக்கின்றன என்று கூறி நுகேகொடையில் உள்ள தனியார் வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் 17 இலங்கையர்களை அந்த நாட்டுக்கு அனுப்பியுள்ளது.

என்றாலும், இங்கு என்ன வேலை வாய்ப்புகள் உள்ளன எனத் தெளிவான பதில்கள்

11

# இந்திய எல்லைக்குள் நுழைந்து போராட்டம்

## வடக்கு மீனவர்கள் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 05

இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரத்தை சுரண்டுவதை தடுக்கும் வகையில் இந்திய எல்லைக்குள் நுழைந்து போராட்டம் நடத்த தயாராக இருப்பதாக வடமாகாண மீனவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை கடல் எல்லைக்குள் அதிகரித்துள்ள இந்திய மீனவர்களின் அத்துமீறலை கண்டிக்கும் வகையில் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் சுழிபுரம் மேற்கு அலை மகள் கடற்றொழி

11

# இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரம் மெல்லமெல்ல சூடுபிடிக்கத் தொடங்கியிருக்கின்றது. இதுவரை ஜே.வி. பியின் தேசிய மக்கள் சக்தியும் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் மாத்திரமே முழு அளவிலான பிரசாரத்தை தொடங்கியிருந்தனர்.

ஜனாதிபதி ரணிலின் பிரசாரத்தை அவருக்கு ஆதரவு வழங்குவதற்காகவே பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்து தனித்து இயங்கும் நிமல் லான்சா தலைமையிலான புதிய கூட்டணி மாத்திரமே இதுவரை இரண்டு பிரசார கூட்டங்களை நடாத்தியபோதிலும், அவரின் பிரதான கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி இதுவரை பிரசாரக் கூட்டம் குறித்து எதுவித ஏற்பாடுகளையும் செய்யாமல் அமைதியாக இருப்பது பற்றி ஏற்கனவே இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

அவர்களும் இப்போது தமது பிரசாரத்தில் குதிக்க இருப்பதான செய்தியே இப்போது தெற்கில் பரபரப்பாக பேசப்படுகின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது தேர்தல் பிரசாரத்திற்காக குழு ஒன்றை அமைத்திருக்கிறார்.

அந்தக்குழுவில், தனது செயலாளர், மற்றும் தனது அலுவலக பிரதானி ஆகியோருடன் மலிக் சமரவீர, இலங்கை வங்கி தலைவரும் தனது நெருங்கிய சகாவுமான ஜனாதிபதி சட்டத்தரணி றொனால்ட் பெரேரா, மகிந்தவின் நெருங்கிய சகாவான மகிந்தானந்த அளுத்கமக ஆகியோர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்தக் குழு முழுவீச்சில் தனது பணிகளைத் தொடங்கியிருக்கும் அதேவேளை பிரசாரப் பணிகளை கவனிக்க தனித்தனிக் குழுக்களும் அமைக்கப்பட்டிருக்கின்றனவாம். டிஜிற்றல் பிரசாரத்திற்காக பிரபல பல்கலைக் கழகம் ஒன்றின் உபவேந்தர் தலைமையில் ஒரு குழுவும் களம் இறக்கப்பட்டிருக்கின்றதாம்.

இதேவேளை, ஒருபுறம் மகிந்த தரப்பிலிருந்து ஆட்களை பிடிக்கும் வேலையை நிமல் லான்சா செய்துகொண்டிருக்க, ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து ஆட்களைப் பிடிக்கும் வேலையை மலிக் சமரவீர ஆரம்பித்திருக்கிறார் என்கின்றன ஐ.தே. கவுக்கு நெருக்கமான வட்டாரங்கள். ரணில் பதவியில் இருக்கும் போதெல்லாம் 'டீல்'களைப் போடுவதில் வல்லவரான மலிக், தனது 'பணியை' ஆரம்பித்திருக்கிறாராம். தனித்தனியாக எதிரணிக் கட்சிகளில் உள்ள உறுப்பினர்களை சந்தித்து அவர்களின் குடும்பத் தேவைகள், தனிப்பட்ட தேவைகள் என்று அவற்றை ஒவ்வொன்றாக செய்து கொடுத்து அவர்களைத் திருப்திப்படுத்தத் தொடங்கியிருக்கின்றார் என்கின்றன அந்தச் செய்திகள்.

இதேவேளை, நிமல் லான்சாவும், பொதுஜன பெரமுனைவின் ஸ்தாபகர் பசில் பாணியில் தனது கட்சிக்காரர்களை 'அணுகி' வருகிறாராம்.

இதேவேளை, எதிர்வரும் பத்தாம் திகதி குளியாப்பிட்டி நகரில் தமது முதலாவது பிரசாரக் கூட்டத்தை மிகப் பெரிய அளவில் நடத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி திட்டமிட்டு அதற்கான வேலைகளை ஆரம்பித்திருக்கின்றது. கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான அகிலவிராஜ் காரியவசம் அந்த முதலாவது பொதுக் கூட்டத்திற்கான வேலைகளை ஒருங்கிணைத்து வருகின்றார். முதலாவது கூட்டம் என்பதால் கட்சியினர் ஒவ்வொருவரும் எத்தனை எத்தனை மக்களைக் கொண்டுவரவேண்டும் என்று கட்டளை இட்டிருக்கிறாராம் அவர்.

இந்த முதலாவது பிரசாரக் கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ஒரு சிலரையாவது கொண்டுவந்துவிட வேண்டும் என்று மலிக் சமரவீரவிடமும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றதாம். ஏற்கனவே ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து ரணில் பக்கம் வருவதற்கு சிலர் தயாராக இருந்தபோதிலும், கடைசி நேரத்தில் நிலைமைகள் தனக்கு சாதகமாக இல்லாவிட்டால் அவர் போட்டியிலிருந்து விலகலாம் என்ற எண்ணத்தில் மதில் மேல் பூனைகளாக இருந்த சிலரையாவது இந்தக் கூட்டத்தில் மேடையேற வைத்து முதலாவது கூட்டத்தை மக்கள் திரும்பிப் பார்க்க வைக்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியினர் கணக்குப் போட்டிருக்கின்றனர் என்கின்றன ஐ. தே. க. செய்திகள்.

அண்மையில் தமிழ் கட்சி ஒன்றின் தலைவர் ஒருவரோடு தொடர்பு கொண்ட மலிக் சமரவீர, 'நீங்கள் எங்கள் ஆட்கள் தானே.' என்று உரிமையுடன் பேசினாரெனவும், தங்களையும் தமது தரப்பினர்போல தம்மோடு உரையாடினார் என்றும் அந்தத் தலைவர் கூறினார்.

இனி என்ன, ஆட்டம் ஆரம்பமாகிவிட்டதால் ஊடகங்களுக்கு விரைவில் தினசரி தீனி கிடைக்கும் என்று நம்பலாம்.

**- ஊர்க்குருவி.**

# சாந்தனின் இறுதிப் பயணம்...!





















படங்கள் - யாழ்ப்பாணம், வடமராட்சி செய்தியாளர்கள்

ஈழநாடு
Eelanadu
05.03.2024 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், மாசி 22

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தீர்வை எவரும் தரமாட்டார்கள்

ஜனாதிபதித் தேர்தலுக்கான வியூகங்கள் மெதுவாக சூடுபிடிக்கின்றன. இவ்வாறானதொரு பின்புலத்தில் பொலிஸ் அதிகாரங்கள் இல்லாத 13ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் தமிழ்க் கட்சிகளுடன் பேசவுள்ளதாக ரணில் விக்கிரமசிங்க கூறுகின்றார். மறுபுறம் 13ஆவது திருத்தச் சட்டத்திலுள்ள பொலிஸ் அதிகாரம் இல்லாமலாக்கப்பட வேண்டும் என்று கடும்போக்கு வாதிகள் போர்க்கொடி உயர்த்துகின்றனர். இவ்வாறானதொரு நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் என்போர் என்ன செய்யப் போகின்றனர்? அவ்வப்போது ஒரு சில அறிக்கைகளை வெளியிட்டுவிட்டு இந்திய பிரத மருக்குக் கடிதம் அனுப்பிவிட்டு அமைதியாக இருக்கப் போகின்றனரா?

தமிழ்க் கட்சிகளின் அணுகுமுறையை ஒரு வரியில் சொல்வதானால் – தங்களுக்கான உணவை மற்றவர்கள் சுவையாக சமைத்துத் தட்டில் பரிமாறுவார்கள். அதன்பின்னர், தாங்கள் அதனை நன்றாகப் பிசைந்து தமிழ் மக்களுக்கு ஊட்டுவார்களாம். தமிழ் கட்சிகளின் அரசியல் தீர்வு தொடர்பான எதிர்பார்ப்பு இப்படித்தான் இருக்கின்றது. ஒன்றில் தீர்வை இந்தியா பெற்றுத்தர வேண்டும். அல்லது அமெரிக்கா பெற்றுத்தர வேண்டும் – ஏனெனில், தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு என்பது இப்போது அவர்களுக்கான பணி. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் அழிக்கப்பட்ட பின்னரான கடந்த 14 வருடத்தில் அரசியல் தீர்வு நோக்கிய செயல்பாடுகள் அனைத்துமே படுதோல்வி அடைந்திருக்கின்றன. இந்தத் தோல்வி எதனை உணர்த்துகின்றது?

இந்தக் கேள்வியிலிருந்து சிந்தித்தால் மட்டுமே தமிழ்க் கட்சிகள் பதிலைக் காண முடியும். முதலில் பதிலைக் காணவேண்டும் என்னும் உறுதியான எண்ணத்தில் அனைவரும் சங்கமிக்க வேண்டும். 14 வருட கால அரசியல் அனுபவங்கள் கூறுகின்ற விடயம் ஒன்றுதான் – அதாவது, அரசியல் தீர்வை எவரும் தட்டில் வைத்து நீட்டமாட்டார்கள். இந்தியாவோ அல்லது அமெரிக்காவோ தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் தீர்வை வலிந்து பெற்றுத் தரப்போவதில்லை. உலகில் அவ்வாறு எங்கும் நிகழ்ந் ததுமில்லை.

அப்படி எவரேனும் எண்ணினால் அது அவர்களின் அறியாமையாகவே இருக்க முடியும். அரசியல் தீர்வுக்கான உறுதியான செயல்பாடுகளை ஓர ணியாக தமிழ்க் கட்சிகள் முன்னெடுக்கும்போது, தமிழ் மக்கள் இலங்கைத் தீவில் தவிர்க்க முடியாத ஒரு தரப்பினர என்பதை நிரூபிக்கும்போது மட்டுமே, வெளித்தரப்புகள் தமிழ் மக்களின் பிரச்னையின் பக்கமாகத் திரும்புவர். இல்லாவிட்டால் இராஜதந்திர சந்திப்புகளின்போது, சில விடயங்களை உச்சரித்துவிட்டுப் போவார்கள். இதுதான் கடந்த பதினான்கு வருட காலமாக நடந்தேறிய விடயம்.

உணரச்சிகரமான விடயங்களை முன்னெடுப்பதும் வெளியார் மீதான எதிர்ப்புணர்வை வெளிப்படுத்துவதும் பிரச்னைகளைக் கையாளும் வழிமுறையல்ல – அது நிலைமையை மேலும் சிக்கலாக்கும். ஏனெனில், விடுதலைப் புலிகள் காலத்தில் முன்னெடுத்த எதிர்ப்புவாத அரசியலானது தமிழ் மக்களுக்கு எந்தவொரு நன்மையையும் செய்யவில்லை. மாறாக, தமிழ் மக்களை சர்வதேச அரசியல் சூழலில் இருந்து தனிமைப்படுத்தவே பயன்பட்டிருக்கின்றது. இதனைப் புரிந்து கொண்டுதான் இறுதிக் காலத்தில் விடுதலைப் புலிகளும் சில மாற்றங்களை நோக்கிச் சிந்திக்க முற்பட்டனர். எனினும், கடந்த காலத்தின் நிழலில் இருந்து அவர்களால் தப்பித்துக்கொள்ள முடியவில்லை.

தமிழ் மக்களை தவிர்க்க முடியாத மக்கள் கூட்டமாகக் காண்பிப்பதற்கான செயல்பாடுகளில் தமிழ்க் கட்சிகள் அர்ப்பணிப்புடன் – உறுதியுடன் ஈடுபடாத வரையில் இங்கு எந்தவொரு சாதகமான விடயமும் நடைபெறப் போவதில்லை. இந்த ஜனாதிபதித் தேர்தல் தமிழ் மக்களுக்கு கிடைத்தி ருக்கும் அரிய வாய்ப்பு, இதனை முறையாக கையாண்டால், இலங்கைத் தீவின் ஆட்சி மாற்றத்தில் அக்கறை கொண்டிருக்கும் வெளிசக்திகள் தமிழ் கட்சிகளை நோக்கி நிச்சயம் வருவார்கள்.

# பொலிஸ்மா அதிபர் நியமனமும் அரசமைப்பு பேரவையில் சபாநாயகரின் வாக்கு தொடர்பிலான சர்ச்சையும்

கலாநிதி நிஹால் ஜெயவிக்கிரம

தேசபந்து தென்னக் கோனை பொலிஸ்மா அதிபர் பதவிக்கு ஜனாதி பதி ரணில் விக்கிரமசிங்க நியமித்ததை சில தினங்க ளுக்கு முன்னர் அரசமைப்பு பேரவை அங்கீகரித்தததை அடுத்து அவரின் நியமனம் உறுதிப்படுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், அரசியலமைப்பு பேரவையின் உரிய முறை யிலான அங்கீகாரம் இல் லாமல் அரசியலமைப்புக்கு முரணாக அந்த நியமனம் செய்யப்பட்டிருப்பதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச கூறியதாகவும் அறிவிக்கப்பட்டது.

மறுபுறத்தில், அரசி யலமைப்பு பேரவையின் கூட்டத்துக்கு தலைமை தாங்கிய சபாநாயகர் தேசபந்துவின் நியமனத்தை அங்கீகரிப்பதற்கு தேவை யான ஐந்து வாக்குகளும் பெறப்பட்டதாக சபாநா யகர் கூறியிருக்கிறார்.

அரசியலமைப்பு பேர வை பத்து உறுப்பினர்களை கொண்ட ஓர் அமைப்பு. பிர தமர், சபாநாயகர், எதிர்க் கட்சி தலைவர் மற்றும் நான்கு பாராளுமன்ற உறுப் பினர்களும் எந்தவோர் அரசியல் கட்சியின் அங்கத் தவர்களாக இல்லாத பொது வாழ்விலும் தொழில்துறை வாழ்விலும் மதிப்புநிலை யில் உள்ள மூவரும் (சிவில் சமூகத்தின் சார்பில்) அதன் உறுப்பினர்கள். சபாநாயகர் அதன் தலைவர்.

பொலிஸ்மா அதிபர் பதவிக்கு ஜனாதிபதியால் சிபாரிசு செய்யப்பட்டு அரசியலமைப்பு பேரவை யினால் அங்கிகரிக்கப்படும் ஒருவரைத் தவிர வேறு எவ ரும் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு நியமிக்கப்பட முடி யாது என்று அரசமைப்பு கூறுகிறது.

ஏகமனதான தீர்மா னம் ஒன்றை எட்டுவதற்கே அரசியலமைப்பு பேரவை முயற்சிக்கவேண்டும் என்கிற அதேவேளை, பேரவையின் கூட்டத்தில் பிரசன்னமாக இருக்கும் ஐந்துக்கும் குறையாத உறுப்பினர்களின் ஆதரவு இல்லாத பட்சத்தில் பேரவையின் தீர்மானம் செல்லுபடியாகாது என்றும் அரசியலமைப்பு கூறுகிறது.

பேரவையின் தலைவர் என்ற வகையில் சபாநாய கருக்கு அடிப்படை வாக்கு இல்லை என்றபோதிலும், வாக்குகள் சமநிலையாக பிரிவடையும் பட்சத்தில் அவர் வாக்களிக்கமுடியும் என்றும் அரசியலமைப்பு கூறுகிறது.

தேவையான ஐந்து வாக்குகளுக்கும் ஒன்று குறைவாக அரசியலமைப்பு பேரவையின் நான்கு உறுப் பினர்களே ஜனாதிபதியின் சிபாரிசை அங்கீகரித்து வாக்களித்த அதேவேளை இரு உறுப்பினர்கள் (தானும் உட்பட) எதிராக வாக்களித்ததாக எதிர்க் கட்சி தலைவர் கூறுகிறார். இரு உறுப்பினர்கள் கூட் டத்தில் கலந்துகொள்ள வில்லை. அவர்கள் சிபாரிசை நிராகரித்தாகவே கருதப்படவேண்டும்.

ஆனால், சிபாரிசை ஏற்றுக்கொள்வதற்கு ஆத ரவாக சபாநாயகர் தனது வாக்கை அளித்ததாக எதிர்க்கட்சி தலைவர் கூறினார். எந்த அந்தஸ்தில் சபாநாயகர் வாக்களித்தார் என்ற கேள்வி எழுகிறது. அவருக்கு அடிப்படை வாக்கு இல்லை. வாக்குகள் சமநிலையாக பிரிவடையும் பட்சத்தில் மாத்திரம் அவர் அளிப்பதற்கு ஒரு மேலதிக வாக்கு இருக்கிறது.

அரசமைப்பு பேரவை நான்கு -நான்காக பிரிவ டைந்த நிலையில் மேலதிக வாக்கைப் பயன்படுத்தி யதாக சபாநாயகர் கூறிய தாக பத்திரிகைகளில் செய்தி வெளியானது. இரு உறுப்பினர்கள் மாத்திரமே எதிராக வாக்களித்த போதிலும், கூட்டத்தில் இரு உறுப்பினர்கள் கலந்து கொள்ளாததை மேலும் இரு எதிர்ப்பு வாக்குகளாகக் கருதி வாக்குகள் சமநிலை யாகப் பிரிந்ததாக நினைத்து ஜனாதிபதியின் சிபாரிசை அங்கீகரிப்பதற்கு தேவை யான பெரும்பான்மை வாக் குகளை உறுதிசெய்வதற்கு தனக்குரிய மேலதிக வாக்கை சபாநாயகர் பயன்படுத்தத் தீர்மானித்தார் போன்று தெரிகிறது.

வாக்களிப்பில் கலந்து கொள்ளாத ஓர் உறுப்பினர் எதிராக வாக்களித்ததாகக் கருதப்படவேண்டும் என்று அரசமைப்பு கூறவில்லை.

வாக்களிப்பில் ஓர் உறுப்பினர் கலந்துகொள்ள வில்லை என்றால் அவர் தனது வாக்கை அளிக்க வில்லை என்பதே அதன் அர்த்தமாகும். எதிரானது என்றோ அல்லது ஆதரவா னது என்றோ எண்ணப்ப டுவதற்கு அங்கு வாக்கு எதுவும் கிடையாது.


மேலும், உறுப்பினர் ஒருவர் பல்வேறு காரணங் களின் நிமித்தம் வாக்களிப் பில் கலந்துகொள்ளாமல் இருக்கலாம். அந்த கார ணங்களில் ஒன்று நியமனத் துக்காக பரிசீலிக்கப்படுப வர் அந்த உறுப்பினருடன் தனிப்பட்ட முறையில் உறவைக் கொண்டவராக அல்லது குடும்பத் தொடர்பு உடையவராக இருக்கலாம். அத்தகைய சூழ்நிலையில், சாதாரணமாக எதிராக அன்றி ஆதரவாகவே வாக்க ளிக்கக்கூடிய உறுப்பினர் முறைகேடானதாக அல்லது சூழலுக்கு பொருத்தமில்லா ததாக ஒரு தோற்றப் பாட்டை தவிர்ப்பதற்காக வாக்களிப்பில் கலந்துகொள் ளாமல் இருந்திருப்பார்.

எனக்கு தெரிந்தவரை யில் இலங்கையிலோ அல் லது வேறு எங்குமோ பாரா ளுமன்ற நடைமுறையில் வாக்களிப்பில் கலந்துகொள் ளாத உறுப்பினர் ஒருவர் எதிராக வாக்களித்ததாக ஒருபோதும் கருதப்பட்ட தில்லை. வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை என்றால் குறிப்பிட்டஒரு சட்டமூலம் அல்லது பிரே ரணை மீது வாக்களிக்க வில்லை என்பதே அர்த்த மாகும். அத்தகைய உறுப் பினர் வாக்களிப்பில் 'கலந்துகாள்ளவில்லை' என்றே பாராளுமன்ற பதி வேடான ஹன்சார்ட்டில் பதிவு செய்யப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் முக்கியமான தீர்மானம் ஒன்றின் மீதான வாக்கெ டுப்பில் கலந்துகொள் ளாமல் இருப்பதற்கு நிரந்தர உறுப்பு

05

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



மார்ச் - 05 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம் - மாசி 22
நல்ல நேரம் : 07.30 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : தசமி




**மேடம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். சக ஊழியர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். அலைச்சல் அதிகரிக்கும்.

**இடபம்**

சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகள் தேடி வரும். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**மிதுனம்**

சமயோசிதமாக பேசி சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபாரத்தில் புகழ்பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

**கடகம்**

குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். உத்தியோகத்தில் புது பொறுப்பை ஏற்பீர்கள். புதுமை படைக்கும் நாள்.

**சிம்மம்**

நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். நட்பு வட்டம் விரிவடையும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**கன்னி**

குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். திடீர்யோகம் கிட்டும் நாள்.

**துலாம்**

கணவன் - மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**விருட்சிகம்**

ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**தனுசு**

குடும்பத்தில் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களுடன் விவாதம் வேண்டாம். சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**மகரம்**

குடும்பத்தில் மனம் விட்டு பேசுவீர்கள். மனதிற்கு இதமான செய்தி வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். பெருந்தன்மையுடன் நடந்துக் கொள்ளும் நாள்.

**கும்பம்**

எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். உங்களை நம்பி சில முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். சிந்தனைத் திறன் பெருகும்.

**மீனம்**

குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். ஆடை ஆபரணம் சேரும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். மனநிறைவு கிட்டும்.

# எல்லை தாண்டிச் சென்று மீன் பிடிக்க வேண்டாம்!

## இராமேஸ்வரம், மண்டபம் மீனவர்களுக்கு எச்சரிக்கை

இராமேஸ்வரம், மார்ச் 05

இராமேஸ்வரம், மண்டபம் மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்று ன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பாக்குநீரிணையில் மீன்பிடியில் ஈடுபடும் இராமேஸ்வரம், மண்டபம் பகுதி மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிக்கின்றனர் என்ற குற்றச்சாட்டில் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு சிறைத் தண்டனை விதிக்கப்படுகின்றனர். அத்துடன், படகுகளும் பறிமுதல் செய்யப்படுகின்றன.

இதனால் வாழ்வாதாரம் இழந்த ஏராளமான மீனவர்கள் மாற்றுத் தொழிலை நாடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனிடையே, தமிழக மீனவர்களின் எல்லை தாண்டலை கண்டித்து இலங்கை மீனவர்களும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

எனவே, இராமேஸ்வரம், மண்டபம் மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கும் போது தேவையற்ற பிரச்னைகள் ஏற்படுவதை தடுக்கும் வகையில் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அதிகாரிகள் இராமேஸ்வரம், மண்டபம் மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இதனால், இராமேஸ்வரத்தில் சிறிய படகுகள் மட்டுமே மீன்பிடிக்க சென்றுள்ளன. பெரிய படகுகள் மீன்பிடிக்க செல்லவில்லை என்பது குறிப்பிடதக்கது.

(ஐ)

# மோடியைப் பார்த்து தமிழக மக்கள் ஏமாற மாட்டார்கள்!

## முதல்வர் ஸ்டாலின்

மயிலாடுதுறை, மார்ச் 05

"தமிழக மக்கள் ஒருபோதும் பிரதமர் மோடியை பார்த்து ஏமாற மாட்டார்கள்" என்று முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

மயிலாடு துறையில் மாவட்ட ஆட்சியர் பணிமனையை திறந்து வைத்து உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பழமையான திருக்கோயில்கள் நிறைந்த மாவட்டம் மயிலாடுதுறை. மண் மணமும், நெல் மணமும் கலந்து வீசுவது டெல்டா மாவட்டங்களின் சிறப்பு. புதிய மாவட்டங்கள் அறிவிப்பது பெரிதல்ல உள்கட்டமைப்பை ஏற்படுத்தித் தர வேண்டும்.



விரைவில் மக்களவை தேர்தல் நடக்க இருப்பதால் அடிக்கடி பிரதமர் மோடி தமிழகம் வரத் தொடங்கியுள்ளார். வாக்கு மட்டும் போதும் என்று நினைத்து தமிழகத்துக்கு வருகிறார் மோடி. அண்மையில் ஏற்பட்ட 2 இயற்கை பேரிடர்களுக்கு ஒரு சதம்கூட நிதி தரவில்லை. தமிழக மக்கள் ஒருபோதும் பிரதமர் மோடியைப் பார்த்து ஏமாற மாட்டார்கள். தமிழகத்தின் உரிமைக்காகவும், வளர்ச்சிக்காகவும் பாடுபடும் திராவிட மொடல் அரசின் பக்கமே மக்கள் நிற்பார்கள் - என்றார். (ஐ)

# ராகுல் காந்தி ஸ்ரீபெரும்புதூரில் போட்டியிடவேண்டும்!

தூத்துக்குடி, மார்ச் 01

ஸ்ரீபெரும்புதூர் பாராளுமன்ற தொகுதியில் ராகுல்காந்தி போட்டியிட வேண்டும் என்று அந்த மாவட்ட காங்கிரஸ் கட்சியினர் தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாக தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக நியமிக்கப்பட்ட செல்வப்பெருந்தகை நேற்று தூத்துக்குடிக்கு சென்றார். அங்கு, கட்சியினர் அவரை வரவேற்றனர். இதன் பின்னர் அங்கு கருத்து வெளியிட்ட அவர்,

நாங்கள் தி.மு.க. கூட்டணியில் உறுதியாக இருக்கிறோம். அ.தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் இருக்க வேண்டும் என்பது அவர்களுடைய விருப்பம். நாங்கள் 5 தேர்தலில் தி. மு. கவுடன் கூட்டணியில் இருக்கிறோம். தி.மு.க.- காங்கிரஸ் உறவு நம்பிக்கையான உறவாக இருக்கிறது. எங்களை ஒருபோதும் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் குறைத்து மதிப்பிட மாட்டார் - என்றார். (ஐ)

# பழனிசாமியுடன் சீமான் தரப்பு சந்திப்பு

சென்னை, மார்ச் 05

அ. தி. மு. க. பொதுச்செயலர் பழனிசாமியை நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தரப்பில் அவரின் குடும்ப உறுப்பினர்கள் இருவர் சந்தித்துப் பேசியுள்ளனர்.

பாராளுமன்றத் தேர்தலில் தி. மு. க. கூட்டணிக்கு இணையான கூட்டணியை உருவாக்க அ. தி. மு. க. வியூகம் அமைத்து வருகிறது. இதன்படி, பா. ம. க., தே. மு. தி. க., புதிய தமிழகம், சரத்குமாரின் சமத்துவ மக்கள் கடசியிடம் பேச்சு நடத்துகிறது.

இந்த நிலையில், எந்தக் கட்சியுடனும் கூட்டணி இல்லை என்று அறிவித்து தனித்து போட்டியிடுகிறது நாம் தமிழர் கட்சி. அந்தக் கட்சிக்கு தனியான வாக்குவங்கி இருப்பதால் அதனை கூட்டணியில் சேர்க்க கடும் பிரயத்தனம் செய்து வருகின்றது அ. தி. மு. க.

இதனிடையே, நாம் தமிழர் கட்சி வழக்கமாக போட்டியிட்ட விவசாயி சின்னத்தை இம்முறை தேர்தல் ஆணையம் ஒதுக்கவில்லை. இதனால், கூட்டணி அமைக்கும் நிலைக்கு அவர் தள்ளப்பட்டுள்ளார். இந்த நிலையிலேயே சீமானின் குடும்பவத்தை சேர்ந்த இருவர் பழனிசாமியை சந்தித்துப் பேசியுள்ளனர். (ஐ)

# சிறுத்தைகள் கட்சி கூட்டணிக்கு வந்தால் கூடுதல் இடம் கிடைக்கும்

## அ. தி. மு. க. கட்சி அறிவிப்பு

சென்னை, மார்ச் 05

விடுதலை சிறுத்தைகள் கட்சி கூட்டணிக்கு வந்தால் அவர்களுக்கு அதிக இடம் வழங்கப்படும் என்று அ. தி. மு. க. கட்சி கூறியுள்ளது.

ஜெயக்குமாரிடம் விடுதலை சிறுத்தைகள் கட்சி தொடர்பில் கேள்வி எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், அதற்கு அவர் யாரையும் கெஞ்ச வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. எங்களுக்கான தனித்தன்மை இருக்கு. அதற்கான அடையாளம் இருக்கிறது. அ. தி. மு. க. தனியாக நின்றுகூட சாதனை படைத்திருக்கிறது என்றார்.

மேலும், 2016, 2014 இரண்டு தேர்தல்களில் தனியாக நின்றோம். அதே நேரத்தில் ஒரு கட்சி கூட்டணிக்கு விரும்பினால் அதை எப்படி வேண்டாம் என்று சொல்ல முடியும். அதைத்தான் நான் சொன்னேன்.

விடுதலை சிறுத்தைகள் குறித்து நான் சொன்ன கருத்தில் எந்த ஒரு உள்நோக்கமும் கிடையாது. தி. மு. க. கூட்டணி குறித்து இழுபறி என தகவல் வருகிறது. அதைத்தான் நானும் சொன்னேன்.

திமுக வெறும் சில்லறை கட்சிகளுடன் மட்டுமே இப்போது இடங்களை முடித்துள்ளது. இன்னும் காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகளுக்கு இடங்கள் இறுதியாகவில்லை.

விடுதலை சிறுத்தைகள் கட்சி கூட்டணிக்கு வந்தால் வரவேற்போம். வரவில்லை என்றால் பரவாயில்லை. அவர்கள் வந்தால் அவர்களுக்குத்தான் அதிக இடம் கிடைக்கும் - என்றார்.

(ஐ)

# பயங்கரவாத தடைச் சட்டத்தை பதிலீடு செய்வதில் முன்னேற்றம் அவசியமானது

## வலியுறுத்துகிறது ஐரோப்பிய ஒன்றியம்

கொழும்பு, மார்ச் 05

**ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையைத் தொடர்ந்து வழங்குவது குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தினால் அளிக்கப்பட்ட உத்தரவாதத்துக்கு இலங்கை நன்றி தெரிவித்திருக்கும் அதேவேளை, பயங்கரவாத தடைச் சட்டத்தைப் பதிலீடு செய்யும் விடயத்தில் மேலும் முன்னேற்றம் எட்டப்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.**

ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கை கூட்டு ஆணைக் குழுவின் 26ஆவது கூட்டம் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்தன மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார சேவைப்பிரிவின் ஆசிய, பசுபிக் பிராந்திய பிரதி நிறைவேற்றுப் பணிப்பாளர் பயோலா பம்பலோனி ஆகியோர் தலைமையில் கடந்த மாதம் 22ஆம் திகதி பிரசல்ஸில் நடைபெற்றது.

இதன்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை உள்ளடக்கியதாக இரு தரப்பினரும் இணைந்து கூட்டறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

அதன்படி இக்கூட்டத்தின் போது பொருளாதார பாதுகாப்புக் கொள்கை, செயற்கை நுண்ணறிவுசார் கொள்கை, வர்த்தக மற்றும் மனித உரிமைகள் நிலைப்பாடு, சூழலியல் பாதுகாப்பு, உலகளாவிய இணைப்பு உத்தி மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்திய - பசுபிக் உத்தி என்பன உள்ளடங்கலாக கடந்த சில வருடங்களில் தாம் பின்பற்றிவந்த முக்கிய கொள்கைகள் மற்றும் சட்டதிட்டங்கள் தொடர்பில் இலங்கை பிரதிநிதிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் விளக்கமளித்தனர்.

அதேவேளை, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் மீட்சி ஆகியவற்றில் கடந்த ஆண்டு எட்டப்பட்ட முன்னேற்றம் தொடர்பில் இலங்கை பிரதிநிதிகள் விளக்கமளித்தனர்.

அதன்படி, நிலையான பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கும், நலிவடைந்த நிலையில் உள்ளோருக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்குமான நகர்வுகள் இலங்கையால் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஏற்றுக்கொண்ட ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள், இலங்கையின் விரைவான பொருளாதார மீட்சி மற்றும் வளர்ச்சி என்பன தொடர்பில் தமது வாழ்த்தினைத் தெரிவித்தனர்.

அடுத்ததாக இவ்வாண்டு நாட்டில் நடைபெறவிருக்கும் தேர்தல்கள் தொடர்பில் இலங்கை பிரதிநிதிகள் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்தனர்.

குறிப்பாக அரசியலமைப்பினால் வழங்கப்பட்டுள்ள ஆணைக்கு அமைவாக ஜனாதிபதி தேர்தல் நடைபெறுமென அவர்கள் உறுதியளித்தனர். அதற்குப் பதிலளித்த ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள், இலங்கை அழைப்பு விடுக்கும் பட்சத்தில் ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவொன்றை அனுப்பிவைப்பதற்குத் தயாராக இருப்பதாகக் கூறினர்.

மேலும், கடந்த மாதம் 6ஆம் திகதி நிகழ்நிலை முறைமையில் நடைபெற்ற வர்த்தகம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான ஐரோப்பிய ஒன்றியம் இலங்கை பணிக்குழு கூட்டம் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அதன்படி, ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை வழங்கல் குறித்து மீளாய்வு செய்வதற்கான நடைமுறை தொடர்பில் விளக்கமளித்த ஐரோப்பிய ஒன்றிய அதிகாரிகள், புதிய நடைமுறை அமுலுக்கு வந்தவுடன் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகை மூலம் பயனடையும் இலங்கை உள்ளிட்ட நாடுகள் அதனைத் தொடர்ந்து பெறுவதற்கு விண்ணப்பிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுவதாக சுட்டிக்காட்டினர். அதற்குப் பதிலளித்த இலங்கை பிரதிநிதிகள், இரு தரப்பினருக்கும் இடையிலான பரஸ்பர வர்த்தகத் தொடர்புகளை நினைவுகூர்ந்ததுடன் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைத் தொடர்ந்து வழங்குவது குறித்து அளிக்கப்பட்ட உத்தரவாதத்துக்கு நன்றி தெரிவித்தனர்.

அதேவேளை ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையைப் பெறுவதற்குரிய கடப்பாடுகள் உரியவாறு பூர்த்தி செய்யப்படுகின்றனவா என ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்து கண்காணிக்கும் என அத்தரப்பு பிரதிநிதிகள் குறிப்பிட்டனர்.

அதேவேளை பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்தின் ஊடாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பதிலீடு செய்வதற்கும், அச்சட்ட வரைபை சர்வதேச தராதரங்களுக்கு அமைவாகத் தயாரிப்பதற்கும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகள் பற்றி இலங்கை பிரதிநிதிகள் விளக்கமளித்தனர்.

அதனை செவிமடுத்த ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள், இருப்பினும் இவ்விவகாரத்தில் மேலும் முன்னேற்றம் எட்டப்படவேண்டும் என வலியுறுத்தினர்.

(அ)

### பொலிஸ் மா அதிபர்

3ஆம் பக்கத் தொடர்ச்சி

நாடொன்று எடுக்கும் தீர்மானம் எதிர்மறையான வாக்காக கருதப்படுமேயானால், விளைவுகள் பயங்கரமானவையாக இருக்கும். ஏனென்றால், அது ஒரு வீட்டோவாக கருதப்பட்டுவிடும். அந்த நிரந்தர உறுப்பு நாடு நினைத்ததற்கு எதிரானதாக விளைவு வந்துவிடும்.

ஜனாதிபதியின் சிபாரிசு அங்கிகரிக்கப்படுவதை உறுதி செய்வதற்கு அடிப்படை வாக்கு ஒன்றைப் பயன்படுத்துவதாக நினைத்து சபாநாயகர் செயல்பட்டிருந்தால் அரசமைப்புக்கு மாறாக அவர் செயல்பட்டதாகவே அமையும். அரசியலமைப்பு அவருக்கு அடிப்படை வாக்கு ஒன்றை வெளிப்படையாகவே நிராகரிக்கிறது.

அரசமைப்பு பேரவையில் வாக்குகள் சமநிலையாகப் பிரிந்ததாக நினைத்து மேலதிக வாக்கை பயன்படுத்தியிருந்தாலும் அது அரசியலமைப்புக்கு முரணானது மாத்திரமல்ல யதார்த்தத்துக்கு புறம்பானதும் நகைப்புக்கிடமானதுமாகும்.

# விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பியோடிய ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி கைது!

கொழும்பு, மார்ச் 05

மது போதையில் காரை ஓட்டி விபத்து ஏற்படுத்தி விட்டு தப்பியோடிய ஓய்வு பெற்ற பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரை குருந்துவத்தை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை ராஜகிய மாவத்தை பாதசாரி கடவையில் பாதசாரி ஒருவரை மோதிவிட்டு தப்பியோடிய கார் ஒன்று துன்முல்ல சந்தியில் மற்றுமொரு காரையும் மோதிவிட்டு சென்றது. அந்த காரை பொலிஸார் துரத்திப் பிடித்தனர்.

அந்த காரை செலுத்தியவர், ஓய்வு பெற்ற சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் என்பதை கண்டுபிடித்தனர்.

விபத்தை ஏற்படுத்திய காரில் இருந்து ஆஸ்திரிய நாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கி மற்றும் 8 தோட்டாக்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

விசாரணையில் துப்பாக்கி உரிமம் பெற்றது தெரியவந்தது. இந்த ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி கொழும்பு 5 இல் உள்ள அன்டர்சன் அடுக்குமாடி குடியிருப்பில் வசிப்பவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அவரின் சாரதி அனுமதிப் பத்திரத்தை பறிமுதல் செய்து அவரை பொலிஸ் பிணையில் விடுவிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

குடிபோதையில் வாகனம் ஓட்டியமை மற்றும் இரண்டு விபத்துக்களுக்குப் பின்னர் தப்பிச் சென்றமை தொடர்பில் சந்தேகநபர் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்யவுள்ளதாக உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ)

# சட்டவிரோதமாக 160 சிகரெட்டுக்களை வைத்திருந்தவருக்கு ரூ.80,000 அபராதம்!

கொழும்பு, மார்ச் 05

சட்டவிரோதமாக 160 சிகரெட்டுகளை தன்வசம் வைத்திருந்த நபர் ஒருவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதனையடுத்து அவருக்கு மாளிகாகந்த நீதிவான் லோச்சனி அபேவிக்ரம வீரசிங்க 80,000 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

மட்டக்குளி காக்கைதீவைச் சேர்ந்த ஒருவருக்கே இந்த அபராதம் விதிக்கப்பட்டது.

சுங்க வரியின்றி இறக்குமதி செய்யப்பட்ட 160 சிகரெட்டுகளை வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் புகையிலை வரிச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக கொழும்பு, முகத்துவாரம் பொலிஸார் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

# தம்புள்ளை-ஹபரணை வீதியில் விபத்து: பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த மூவர் காயம்!

கொழும்பு, மார்ச் 05

தம்புள்ளை - ஹபரணை பிரதான வீதியின் பெல்வெஹர பகுதியில் நேற்றுக் காலை பஸ் ஒன்றும் காரும் மோதியதில் விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில், காரில் பயணித்த பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஒரே குடும்பத்தின் தாய், தந்தை மற்றும் ஆண் குழந்தையும் பஸ்ஸில் பயணித்த ஒருவரும் காயமடைந்து தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்றும், தம்புள்ளையில் இருந்து சீகிரியா நோக்கி வெளிநாட்டவர்களை ஏற்றிச் சென்ற காருமே மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

பஸ் அதிவேகமாக சென்றதாகவும், மற்றொரு வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டபோது, எதிரே வந்த கார் மீது மோதியதாகவும் விபத்தை கண்டவர்கள் தெரிவித்தனர்.

(அ)

# பாடசாலை ஒன்றில் திடீர் தீ!

கொழும்பு, மார்ச் 05

மாத்தறை - வெலிகம பிரதேசத்தில் உள்ள தனியார் அரபு பெண்கள் பாடசாலை ஒன்றில் தீ பரவியுள்ளது.

தீ விபத்தின்போது பாடசாலையில் சுமார் 150 மாணவிகள் இருந்த போதிலும், அவர்கள் யாரும் தீயினால் பாதிக்கப்படவில்லை.

அப்பகுதி மக்கள் ஒன்றிணைந்து தீயை விரைவாக அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டபோதிலும், தீயினால் சொத்துக்களுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவராத நிலையில், பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (அ)

# தேனிலவுக்குச் சென்றபோது வீதியில் தவறிவிழுந்த ஜோடி

## தப்பியோடியது வாகனம்

கொழும்பு, மார்ச் 05

கடுவெல - மாலம்பே வீதியில் கடுவெல மாநகர சபைக்கு முன்பாக மணமக்கள் பயணித்த டிஃபென்டர் கார், எதிர்திசையில் வந்த வான் மற்றும் மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் காயமடைந்த புதுமணத் தம்பதிகள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கடுவெல பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த டிபென்டர் கார் வாடகை அடிப்படையில் எடுக்கப்பட்டது என்பதும், வாடகை சேவையின் சாரதியும், அதனை ஓட்டி வந்த அவரது நண்பரும் குடிபோதையில் இருந்ததாகவும், சாரதியின் கவனக்குறைவால் விபத்து நேர்ந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்தில் டிபென்டரின் பின்பக்க கதவு திறக்கப்பட்டு மணமக்கள் வெளியே விழுந்தனர்.

டிபென்டர் காரை ஓட்டிச் சென்றவர் காரை பின்னோக்கிச் செலுத்திய போது, மணமக்கள் இருவரும் காரின் அடியில் விழுந்துவிட, சாரதி காரை மீண்டும் முன்பக்கமாக எடுத்துச் சென்று வேறு வீதியில் வாகனத்தை விட்டுவிட்டு, சாரதியும் அவரது நண்பரும் ஓடிவிட்டனர்.

பின்னர் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையில் டிபென்டர் காரின் சாரதியும் அவரது நண்பரும் பல்பொருள் அங்காடியில் பதுங்கியிருந்த போது சிக்கியுள்ளனர்.

சந்தேகநபரான சாரதியும் அவரது நண்பரும் கடுவெல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்படும் போது இருவரும் குடிபோதையில் இருந்துள்ளனர்.

மணமகனும், மணமகளும் தங்களது நெருங்கிய நண்பர்களுடன் திருமணத்தை மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். அது முடிந்ததும், வாடகை டிபென்டர் காரில் தேனிலவுக்காக ஹோட்டலுக்குச் சென்று கொண்டிருந்தபோது இந்த துரதிர்ஷ்டவசமான சம்பவத்தை சந்தித்தனர்.

(அ)

# அரசியல்துறையில் பெண்கள் அதிகம் பிரகாசிக்க வேண்டும்

## மத்திய வங்கி முன்னாள் ஆளுநர் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 05

**அரசியல்துறையை பார்க்கும் போது இலங்கையில் 10 சதவீதத்துக்கும் குறைவான பெண்களே பாராளுமன்ற உறுப்பினர்களாகக் காணப்படுகின்றனர். ஆனால் ஏனைய நாடுகளில் 40 சதவீதத்திற்கும் அதிகமான பெண்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக காணப்படுகின்றனர். பெண்கள் அரசியல் துறைகளிலும் பிரகாசிக்க வேண்டுமென இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி தெரிவித்தார்.**

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு இலங்கை தமிழ் மாதர் சங்கம் "பெண்களின் பயணம்" என்ற தொனிப்பொருளில் விசேட நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தது.

இந்நிகழ்வு கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, இசைக்கலைஞரும் இசைக் கல்வியியலாளருமான சௌந்தரி டேவிட் ரொட்ரிகோ, சமூகவியலாளரும் நாவலாசிரியருமான அமீனா ஹூசைன் மற்றும் இலங்கை தமிழ் மாதர் சங்கத்தின் முன்னாள் தலைவி சாந்தி பாலசுப்ரமணியம் ஆகியோர் கௌரவிக்கப்பட்ட நிலையில் அவர்களுக்கு சிறப்பு விருதுகளும் வழங்கப்பட்டன.




இங்கு மத்திய வங்கி முன்னாள் அளுநர் மேலும் தெரிவிக்கையில்-

உங்களுடன் இருப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இலங்கை மத்திய வங்கியில் பெண்களும் நிறைவேற்று அதிகாரிகளாக சேவையாற்றி வருகின்றனர். இந்நிலையில், அரசியல் துறையை பார்க்கும் போது இலங்கையில் 10 சத வீதத்துக்கும் குறைவான பெண்களே பாராளுமன்ற உறுப்பினர்களாக காணப்படுகின்றனர். ஆனால் வெளிநாடுகளில் 40 சத வீதத்திற்கும் அதிகமான பெண்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக காணப்படுகின்றனர். பெண்கள் அரசியல் துறைகளிலும் பிரகாசிக்க வேண்டும். மேலும், பெண்களைப் பொறுத்தவரை கல்வி மிகவும் முக்கியமானதாகும். குடும்பத் தலைவியான தாய் கல்வி தகைமையுடன் இருக்கும்போது அந்த குடும்பம் சிறப்பாக வழி நடத்தப்படும். எனவே பெண்களுக்கு கல்வி மிகவும் முக்கியமானதாகும்-என்றார். (அ)

# கட்டுநாயக்க விமான நிலையம் சென்ற இஸ்ரேலிய யுவதியிடம் தோட்டாக்கள்!

கொழும்பு, மார்ச் 05

இலங்கையிலிருந்து இஸ்ரேல் திரும்புவதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றிருந்த இஸ்ரேலிய யுவதி ஒருவரின் பயணப் பொதியில் 5.56 மில்லிமீற்றர் தோட்டாக்களை கட்டுநாயக்க விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் கண்டுபிடித்து நேற்று அதிகாலை விமான நிலையப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இஸ்ரேல் இராணுவத்தில் பணியாற்றிய 22 வயதுடைய யுவதி ஒருவர் தனது நண்பியுடன் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

நேற்று அதிகாலை 1.55 மணிக்கு டுபாய்க்கு புறப்பட்ட விமானத்தில் செல்வதற்காக அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.

அங்கு அவர் கொண்டு வந்திருந்த பொதியை விமான நிலைய பாதுகாப்பு அதிகாரிகள் ஸ்கானிங் இயந்திரம் மூலம் சோதனை செய்தபோதே இந்த தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டன.

பின்னர், இவர் கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (அ)

# அதிகளவு முதியவர்களை கொண்ட நாடாக இலங்கை

கொழும்பு, மார்ச் 05

தெற்காசிய நாடுகளுள் 65 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகை அதிக வீதத்தால் காணப்படும் நாடாக இலங்கை பதிவாகியுள்ளது.

எண்ணிக்கையளவில் சுமார் 25 இலட்சமாக காணப்படும் நிலையில் இது 11 வீதமாக காணப்படுகின்றது.

ஏனைய நாடுகளான பங்களாதேஷில் இது 6 வீதமாக காணப்படுகின்றது.

ஆப்கானிஸ்தானில் 2 வீதமாகவும், பூட்டானில் 6 வீதமாகவும், இந்தியாவில் 7 வீதமாகவும், மாலைதீவில் 5 வீதமாகவும் பாகிஸ்தானில் 4 வீதமாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் , இது கடந்த 2000ஆம் ஆண்டின் இறுதியில் இலங்கையில் 7 வீதமாக காணப்பட்டுள்ளது.

மேலும், 55 வயதுக்கு மேற்பட்ட மக்கள் தொகை தற்போது 39 இலட்சத்தை நெருங்கியுள்ள நிலையில் அது 17.6 வீதமாக காணப்படுகின்றது.

அதன்படி, 55 வயதுக்கு மேற்பட்ட நபர்களுள் 7,30,000 அண்மித்த எண்ணிக்கையிலானோர் அரசாங்கத்தினால் ஓய்வூதியம் பெறுபவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

அரசாங்கத்தின் மூலம் முதியோர்களுக்கான கொடுப்பனவாக வழங்கப்படும் 3000 ரூபாயை பெறுபவர்கள் 5,30,000 ஐ நெருங்கியுள்ளதாக தகவல்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இவ்வாறு நாட்டில் முதியோர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதனால் அரசாங்கம் மட்டுமன்றி மூத்த குடிமக்களும் பல சிக்கல்களுக்கு முகம் கொடுத்துள்ளதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துக்கோரள தெரிவித்துள்ளார். (அ)

# க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கான பாட எண்ணிக்கையை குறைக்க முடிவு

கொழும்பு, மார்ச் 05

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர பரீட்சைக்கான பாடங்களின் எண்ணிக்கையை ஏழு பாடங்களாக குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

மீதமுள்ள மூன்று பாடங்கள் உள்நாட்டில் மாணவர்களுக்கு வழங்கக்கூடிய தொழில் மற்றும் சுற்றுச்சூழல் அறிவை மதிப்பிடும் வகையில் பயன்படுத்தப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக, கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை மற்றும் சாதாரண தரப் பரீட்சைகளில் மாணவர்கள் தோல்வியடையவது குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், குழந்தைகளின் விருப்பங்களையும் திறன்களையும் வெளிப்படுத்தும் பாடப் பிரிவுகளில் தொழில்முறைப் பயிற்சி பெறுவதற்குத் தேவையான பின்னணியைத் தயாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். (அ)

# ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 05

இலங்கையின் ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது

அதே நேரம் சில பொருட்களின் இறக்குமதி காரணமாக பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

மத்திய வங்கியின் கூற்றுப்படி, கடந்த ஆண்டில் பொருட்களை ஏற்றுமதி செய்யும் போது எதிர்பார்த்த வருமானம் குறைந்துள்ளது. அதே சில பொருட்களை இறக்குமதி செய்யும் போது அதன் உத்தேச செலவை விடவும் அதிக தொகை செலவிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், விவசாய மற்றும் ஆடை ஏற்றுமதி மூலம் கிடைக்க பெற்ற வருமானமானது 0.8 வீதம் வீழ்ச்சியடைந்துள்ளது. இவ்வாண்டின் முதல் இரு மாதங்களில் ஏற்றுமதி வருமானமானது 971 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

2023ஆம் ஆண்டை பொறுத்தவரை முதல் இரு மாதங்களில் ஏற்றுமதி வருமானம் 978 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைத்திருந்தது.

இந்நிலையில், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டின் முதல் இருமாதங்களில் ஏற்றுமதி வருமானம் ஒப்பீட்டளவில் வீழ்ச்சியை கண்டுள்ளது. (அ)

# தமிழ் பாடசாலைக்கு சொந்தமான காணியை ஆக்கிரமிக்க முயற்சி!

## பெற்றோர், மாணவர்கள் போராட்டத்தில் குதிப்பு

கொழும்பு, மார்ச் 05

இரத்தினபுரி மாவட்டம் நிவிதிகல கல்வி வலயத்துக்குட்பட்ட தம்மோர்வ கொழும்பகம இல. 1 தமிழ் வித்தியாலயத்திற்கு முன்பாக பிரதேச மக்கள், பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் ஒன்றினைந்து பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டு வருகின்றனர்.

நிவிதிகல தம்மோர்வ கொழும்பகம தமிழ் வித்தியத்திற்கு வழங்கப்பட்டிருந்த காணியை பெரும்பான்மை இனத்தவர்கள் கைப்பற்றியதை அடுத்த தமது பாடசாலையின் காணியை தமக்கு பெற்றுத் தருமாறு கோரி இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 2019 ஆண்டு இரத்தினபுரி நிவிதிகல தம்மோர்வ கொழும்பகம தமிழ் வித்தியத்தின் காணியை பெரும்பான்மை இனத்தவர்கள் கைபற்றியதை அடுத்து இந்த காணி சம்மந்தப்பட்ட வழக்கு விசாரணை இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கில் இரத்தினபுரி நிவிதிகல தம்மோர்வ கொழும்பகம தமிழ் வித்தியத்திற்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது.




இதனை தொடர்ந்து பாடசாலை நிர்வாகம் பிரதேச மக்கள் பாடசாலை மாணவர்கள் ஒன்றினைந்து காணி துப்பரவு பணிகளை ஆரம்பித்தனர். அதனை தொடர்ந்து மீண்டும் இந்த பிரச்னை இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தில் மீண்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இரண்டு வருடங்கள் விசாரணையில் இருந்த வழக்கு கடந்த 2023.11.30.திகதி வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட காணி இரத்தினபுரி நிவிதிகல தம்மோர்வ கொழும்பகம தமிழ் வித்தியத்திற்கு உரியது என்று இரத்தினபுரி மேல் நீதிமன்றத்தால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து மேற்குறிப்பிட்ட பாடசாலை காணியை பிரதேச மக்கள் பாடசாலை மாணவர்கள் ஒன்றினைந்து சுத்தம் செய்த சந்தர்பத்தில் பெரும்பான்மை இனத்தவர்கள் தமக்கு இடைஞ்சல் செய்ததாகவும் பாடசாலை காணியை சுற்றி முள்ளுகம்பியினால் வேலி அடித்ததோடு இது தமக்குரிய காணி என்று வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

தமது பாடசாலை காணியை பெற்று தருமாறு இரத்தினபுரி நிவிதிகல தம்மோர்வ கொழும்பகம தமிழ் வித்தியாலய மாணவர்கள் ஆசிரியர்கள் பிரதேச மக்கள் ஒன்றினைந்து ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பிரசன்ன உட்பட முக்கிய பிரமுகர்கள் நாமலின் கூட்டத்தை புறக்கணித்தனர்

## கட்சி முரண்பாடு காரணமா?

கொழும்பு, மார்ச் 05

**பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தலைமையில் திவுலப்பிட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் தசபல சேனா பொதுக்கூட்டத்தில் அந்த கட்சியின் கம்பஹா மாவட்ட தலைவர் பிரசன்ன ரணதுங்க உட்பட 7 பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளவில்லை.**

**கம்பஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மின்வலு, எரிசக்தி ராஜாங்க அமைச்சருமான இந்திக அனுருத்த இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார்.**

கம்பஹா மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தற பாராளுமன்ற உறுப்பினர்களான ரோஹித்த அபேகுணவர்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, திஸ்ஸ குட்டியாராச்சி மற்றும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளின் முன்னாள் உறுப்பினர்களில் சிலரும் மாத்திரமே கூட்டத்தில் கலந்துக்கொண்டனர்.

பொதுஜன பெரமுனவின் சார்பில் கம்பஹா மாவட்டத்தில் இருந்து கடந்த பொதுத் தேர்தலில் 13 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களில் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, நிமல் லன்சா, நளின் பெர்னாண்டோ, நாலக கொடஹேவா, லசந்த அழகிய வண்ண ஆகியோர் தற்போது தனியான அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜனாதிபதி செயலகத்தில் நடந்த கூட்டம் காரணமாக நாமலின் கூட்டத்தில் கலந்துக் கொள்ள முடியவில்லை- பிரசன்ன

இந்த நிலையில், நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக்கொண்டதால், நாமல் ராஜபக்ஷ தலைமையில் கம்பஹாவில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக்கொள்ள முடியவில்லை என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

எது எப்படி இருந்த போதிலும் பிரசன்ன ரணதுங்க உட்பட பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக செயற்பட்டு வருகின்றனர். இதனால், அந்த கட்சிக்குள் அரசியல் முரண்பாடுகள் நிலவி வருகின்றன.

இந்த முரண்பாடுகள் காரணமாக பொதுஜன பெரமுன நடத்தும் சில முக்கியமான கூட்டங்களில் கலந்துக்கொள்ளாது பாராளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணித்து வருவதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பதிலாக பலவீனமான வேட்பாளரை பொதுஜன பெரமுன நிறுத்தினால், கட்சியில் இருந்து விலகி, ரணிலுக்கு ஆதரவாக செயற்பட போவதாக பிரசன்ன ரணதுங்க கூறியுள்ளார். (அ)

# ஜே.வி.பிக்கு எதிராக ஜனாதிபதி ரணில் பயன்படுத்தவுள்ள 3 விளம்பர உத்திகள்

## சுட்டிக்காட்டுகிறார் அனுரகுமார

கொழும்பு, மார்ச் 05

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனக்கு எதிராக மூன்று விளம்பர உத்திகளை பயன்படுத்தவுள்ளதாக ஜே.வி.பியின் தலைவர் அனுரகுமார திசநாயக்க தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்திக்கு எதிரான பிரசாரத்திற்கு பயன்படுத்துவதற்காக ஜனாதிபதி விளம்பர நிறுவனங்களின் உதவியை நாடியுள்ளதாக அனுரகுமார கூறினார்.

1983ஆம் ஆண்டு வன்முறைகள் 1988-89 ஆண்டு வன்முறைகள் மற்றும் 2022 மே 9 ஆம் திகதி சம்பவங்களை அடிப்படையாக வைத்து ஜே.வி.பியை இலக்குவைக்கவேண்டும் என இந்த விளம்பர நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியுடன் தொடர்புபட்ட நபர் ஒருவரிடம் இதற்கான பொறுப்பு வழங்கப்பட்டதை தொடர்ந்து இந்த விடயம் தெரியவந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக கடந்த காலச் சம்பவங்களை நினைவுபடுத்துவதன் மூலம் ஸ்திரமற்ற நிலையை ஏற்படுத்த ஜனாதிபதி முயல்கின்றார் ஜேவிபியின் தலைவர் தெரிவித்துள்ளார். (அ)

# பெண் துஷ்பிரயோக முயற்சி; பாடசாலையின் அதிபர் கைது!

கொழும்பு, மார்ச் 05

பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயற்சித்த குற்றச்சாட்டில் மொனராகலை பிரதேச பாடசாலை ஒன்றின் அதிபர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்.

தொம்பகஹவெல பொலிஸாரால் நேற்று முன் தினம் இவர் கைது செய்யப்பட்டார்.

இந்த பாடசாலையின் சிற்றுண்டிச்சாலையில் பணி புரியும் பெண் ஒருவரை சந்தேக நபரான அதிபர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயற்சித்துள்ளதாக குற்றம்சாட்டப்பட்டுள்ளார்.

சந்தேக நபரான பாடசாலை அதிபரை பொலிஸார் மொனராகலை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தொம்பகஹவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# மீன்பிடி அமைச்சர் டக்ளஸை சந்தித்தார் பிரான்ஸ் தூதுவர்

கொழும்பு, மார்ச் 05

பிரான்ஸ் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் ஜோன் பொன்சுவா பெஸ்டட் நேற்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடினார்.

கடற்றொழில் அமைச்சில் நடைபெற்ற இச் சந்திப்பில் கடற்றொழில் அமைச்சினால் நிறைவேற்றப்படவுள்ள புதிய கடற்றொழில் சட்டம் மற்றும் மீன்பிடித் துறைமுகங்களின் அபிவிருத்திகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இச்சந்திப்பின் போது கடற்றொழில் அமைச்சின் செயலாளர், உதவிச் செயலாளர், அமைச்சரின் ஆலோசகர் மற்றும் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# நாட்டின் வங்குரோத்து நிலையிலும் எம்.பிக்களுக்கு கோடியில் சம்பளம்

## பொருளாதார சிக்கல்களில் நாட்டு மக்கள்

கொழும்பு, மார்ச் 05

2024ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் தொடர்பிலான விவாதம் இடம்பெற்ற கடந்த டிசெம்பர் மாதத்தில் மாத்திரம் பாராளுமன்ற அமைச்சர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் சுமார் 8 கோடி ரூபாவைத் தாண்டியுள்ளதாக பாராளுமன்ற நிதிப்பிரிவு அறிக்கையிட்டுள்ளது.

அமைச்சரவை அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் 58 பேர் மற்றும் எதிர்க்கட்சி தலைவரின் சம்பளம், சாரதி, உபசரிப்பு கொடுப்பனவுகள் என்பன பாராளுமன்றம் மூலம் செலுத்தப்படாத காரணத்தினால் அவற்றிற்காக செலவழிக்கப்பட்ட தொகை இதனுள் உள்ளடங்கவில்லை எனவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட செலவுகளை தவிர்த்து அவர்களின் மாதாந்த அலுவலக கொடுப்பனவுகள், எரிபொருள் கொடுப்பனவு, தொலைபேசி கட்டண கொடுப்பனவுகள், போக்குவரத்து கொடுப்பனவுகள், வருகைக்கான கொடுப்பனவு உள்ளிட்டவை மற்றும் அமைச்சர்களின் சம்பளம் போன்றவற்றுக்காக இத்தொகை செலவிடப்பட்டுள்ளது.

அதன்படி, பொதுஜன பெரமுனவின் கேகாலை மாவட்ட உறுப்பினர் ராஜிகா விக்கிரமசிங்கவுக்காக அதிகளவான தொகை செலவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவரின் சம்பளம் 54, 285 ரூபாய் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளுடன்சேர்த்து 4, 83,054.15 ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கு பாராளுமன்ற கொடுப்பனவாக 3, 08,416.26 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு பாராளுமன்ற கொடுப்பனவாக 3, 08,416.26 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச மற்றும் மைத்திரி பால சிறிசேன இருவருக்கும் முறையே 3,98,054.15 ரூபாய் மற்றும் 4, 49,907.04 ரூபாய் செலுத்தப்பட்டுள்ளது.

தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளங்கள் தொடர்பில் அறிக்கையொன்று கோரிக்கையாக முன்வைக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, 2023ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் பற்றிய விவரங்கள் அடங்கிய அறிக்கை பாராளுமன்ற நிதிப் பிரிவு தலைவர் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (அ)

# இலங்கை மத்திய வங்கி ஊழியரின் முன்மொழியப்பட்ட சம்பளம் இரத்து!

கொழும்பு, மார்ச் 05

இலங்கை மத்திய வங்கி உட்பட அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் நிதி அதிகாரங்களை குறைக்கும் சட்டமூலம் நீதி அமைச்சரால் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இந் நடவடிக்கை மூலம் மத்திய வங்கி ஊழியர்களின் சம்பளத்தை நிர்ணயிக்கும் அதிகாரம் நீக்கப்பட்டு அந்த அதிகாரம் நிதியமைச்சு மற்றும் பாராளுமன்றத்திடம் வழங்கப்படும் என நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

எனவே, அண்மையில் முன்மொழியப்பட்ட மத்திய வங்கி ஊழியர்களின் சம்பளம் இரத்துச் செய்யப்படும் எனவும், எனினும் நிதியமைச்சுடன் கலந்தாலோசித்து நியாயமான சம்பள உயர்வு குறித்து பரிசீலிக்கப்படும் என்றும் அவர் கூறினார். (அ)

# நீதிவானிடம் வாக்குமூலம் வழங்கிய சமன் ரத்நாயக்க

கொழும்பு, மார்ச் 05

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் சமன் ரத்நாயக்க மாளிகாகந்த நீதிவான் முன்னிலையில் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

நேற்று திங்கட்கிழமை காலை மஹர சிறைச்சாலை அதிகாரிகள் சந்தேக நபரை நீதிமன்றத்துக்கு அழைத்து வந்தனர்.

இவர் நீதிவானின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் சுமார் அரை மணி நேரம் வாக்குமூலம் அளித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து சந்தேக நபரான சமன் ரத்நாயக்க சிறைச்சாலை அதிகாரிகளால் மீண்டும் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். (அ)

# தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் இரண்டாவது மாநாடு திருமலையில்!

நிந்தவூர், மார்ச் 05

**தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் இரண்டாவது மாநாட்டை விரைவில் நடத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.**

**எதிர்வரும் இரு மாதங்களில் கட்சியின் குறித்த இரண்டாவது மாநாட்டை திருகோணமலையில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகக் கட்சியின் பொதுச் செயலாளர் க.சிவராசா (மோகன்) தெரிவித்தார்.**



கட்சியின் நடைபெறவுள்ள இரண்டாவது காங்கிரசுக்கு முன்னோடியாக கட்சியின் பிராந்திய மாநாடுகளை நடத்துவதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி முதலாவது பிராந்திய மாநாடு அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்றது.

பாண்டிருப்பு 2 ஆம் பிரிவிலுள்ள தமிழர் சமூக ஜனநாயகக் கட்சியின் அம்பாறை மாவட்ட பிராந்திய காரியாலயத்தில் அமைப்பாளர் சலீம் பிர்தௌஸ் தலைமையில், குறித்த பிராந்திய மாநாடு நடைபெற்றது.

அம்பாறை பிராந்தியத்தின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் வருகை தந்த கட்சி முக்கியஸ்த்தர்கள், உறுப்பினர்கள் கலந்துகொண்ட இந்த பிராந்திய மாநாட்டில் கட்சியின் பொதுச் செயலாளர் க.சிவராசா (மோகன்), காங்கிரஸ் ஏற்பாடுக்கு குழுச் செயலாளர் கிருபா விக்னேஸ்வரன் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

அத்துடன் பிராந்திய முக்கியஸ்த்தர்களான தோழர்கள், ஊடக செயலாளர் சசி ஆலோசகர் டேவிட், நிதி செயலாளர் சேனாதிராசா, ஏற்பாட்டாளர் ரஞ்சித் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கட்சியின் காங்கிரசுக்கு முன்னோடியான முதலாவது பிராந்திய மாநாடு இதுவெனக் குறிப்பிட்ட பொதுச் செயலாளர் சிவராசா தொடர்ந்து வன்னி, யாழ்ப்பாணம், உட்பட மற்றும் பிராந்திய மாநாடுகளை நடத்தவுள்ளதாக மாநாட்டில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

குறித்த பிராந்தியங்களில் மக்கள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்னைகள், கட்சி மற்றும் அரசியல் தொடர்பான ஆலோசனைகள், கட்சி அமைப்பு விதிகள் தொடர்பிலான திருத்த ஆலோசனைகள் என்பன தொடர்பில் ஆராய்ந்து முன்மொழிவுகளை பிராந்திய கிளைகள் விரைவில் தலைமைப்பீடத்திற்கு முன்மொழிவுகளாகச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் அவர் மேலும் கூறினார். (அ-06)

# கிண்ணியாவில் ஆர்ப்பாட்டம்



கிண்ணியா, மார்ச் 05

கிண்ணியாவில் போதை பொருளுக்கான எதிர்ப்புத் தெரிவித்து ஊர்வலம் நேற்று முன் தினம் காலை 9:00 மணிக்கு இடம்பெற்றது. இவ் ஆர்ப்பாட்ட எதிர்ப்பு ஊர்வலம் கிண்ணியா பழைய வைத்திய சாலை சந்தியிலிருந்து ஆரம்பித்து ஓ ரீகன் பாலம் ஊடாக கிண்ணிய புகாரியடி சந்தி வரை இடம் பெற்றது .

நோவா விளையாட்டு கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்போதை ஒழிப்பு ஊர் வலத்தில், அ அவைத்தியர் தாய் சேய் நல வைத்திய அதிகாரி எம்.எச்.சம். சமீம் திரு கோணமலை.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம் எச் எம் கனி உட்பட சுமார் 16 பதினாறுக்கும் மேற்பட்ட விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (அ)

# சிறுவர்கள் மகிழ்விப்பு

அம்பாறை, மார்ச் 05

“எதிர்கால தலைவர்களான சிறுவர்க ளை மகிழ்ச்சியான சூழலில் வைத்திருப்போம்” எனும் தொனிப்பொருளில் அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் மாணவர்கள் சம்மேளனம் அம்பாறை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தது.

அம்பாறை ஹாடி உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஸ்தாபகர் கனடாவைச் சேர்ந்த ஈவன் ஏ ஹாடி அவர்களின் 60 வது சிரார்த்த தினத்தையொட்டி அம்பாறை வேரன்கெற்றகொட கொத்மலே வித்தியாலயத்தில் கற்றல் உபகரணங்களை வழங்கும் நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தனர்.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். (அ)

## சாய்ந்தமருது ஒக்ஸ்போர்ட் கல்லூரியின் 29ஆண்டு நிறைவும், கௌரவிப்பு நிகழ்வும்



அம்பாறை, மார்ச் 05

சாய்ந்தமருது ஒக்ஸ்போர்ட் கல்லூரியின் 29 ஆண்டு நிறைவு விழாவும், மாணவர்கள் விடுகை மற்றும் கௌரவிப்பு நிகழ்வும் கல்லூரி பணிப்பாளர் எஸ். ஜமால்தீன் தலைமையில் சாய்ந்தமருது அல்- ஹிலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிழக்கின் கேடயம் பிரதானியும், கிழக்கு மாகாண அனைத்துப்பள்ளிவாசல்கள் பொதுநிறுவனங்கள் சம்மேளன நிறைவேற்று குழு உறுப்பினருமான எஸ்.எம். சபீஸ் கலந்துகொண்டு பிள்ளைகளை வளர்ப்பதில் பெற்றோர்களின் வகிபாகம், சமூகத்தை நேசிக்கும் தலைவர்கள் இல்லாமல் போனமையால் சமூகம் அடைந்துள்ள துயரங்கள், எதிர்காலத்தில் பிள்ளைகளை சிறந்த தலைவர்களாக உருவாக்க பெற்றோர்கள் செய்யவேண்டிய பணிகள், எதிர்காலம் மீது உள்ள சவால்கள் தொடர்பில் கருத்துரைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு பணிப்பாளரும், அல்- மீஸான் பௌண்டேஷன் -ஸ்ரீலங்காவின் தவிசாளருமான யூ.எல்.என். ஹுதா உமர், சாய்ந்தமருது பிரதேச முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி வை. திருப்பதி, கல்முனை உப பிரதேச செயலக முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம். ஆயிஷா, அட்டாளை சேனை தேசிய கல்வியல் கல்லூரி விரிவுரையாளர் ஏ.எம். முபாரக், சியபத பைனான்ஸ் பிராந்திய முகாமையாளர் எம். எச்.எம். பாரீஹ் உட்பட அதிதிகள், பெற்றோர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (அ)

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் தமிழ்நாட்டு நூல் தொகுதி அறிமுகம்




நிந்தவூர், மார்ச் 05

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்துடன் இணைந்து இந்திய தமிழ்நாடு ரஹ்மத் பதிப்பகம் நடாத்திய தமிழ்நாடு ரஹ்மத் பதிப்பகத்தின் 'ஸிஹாஹ் ஸித்தா' கிரந்தங்களின் (தமிழ்) மொழிபெயர்ப்புத் தொகுதி அறிமுகமும் 'மிஷ்காத்துல் மஸாபீஹ்' (தமிழ்) நூல் வெளியீடும் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் தலைமையில் நேற்று பல்கலைக்கழக கலை கலாசார கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சர்வதேசப் புகழ் ஒலிபரப்பாளர் பீ.எச். அப்துல் ஹமீட் நெறியாள்கையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வரவேற்புரையை கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸிலும் தலைமையுரையை உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரும், சிறப்புரைகளை இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் எஸ்.எம்.எம். மஸாஹிர், இந்திய சென்னை மந்தைவெளி ஈத்கா மஸ்ஜிதின் தலைமை இமாம் மௌலானா கே.எம். இல்யாஸ் ரியாஜி, இந்திய புதுப்பேட்டை மஸ்ஜிதே மஹ்மூதின் தலைமை இமாம் ஹாபிழ் ஏ. பீர்முகம்மது பாகவி ஆகியோரும் ஆற்றினர்.

நிகழ்வில் ரஹ்மத் பதிப்பகத்தின் நிறுவனர் எம்.ஏ முஸ்தபா அவர்கள் தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அவர்களுக்கு நூல்கள் அடங்கிய தொகுதி ஒன்றை வழங்கி அறிமுகம் செய்து வைத்தார். அதே வேளை இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழிபீடத்துக்கும் நூல்கள் அடங்கிய தொகுதி ஒன்று வழங்கி வைக்கப்பட்டது அத்துடன் தென்கிழக்கு பல்கலைக்கழக அஷ்ரப் ஞாபகார்த்த நூலகத்துக்கும் நூல்கள் வழங்கி வைக்கப்பட்டன இதனை நூலகர் எம்.எம்.றிபாவுடீன் பெற்றுக் கொண்டார்.

நூலின் முதல் பிரதியை முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹசன் அலி பெற்றுக் கொண்டார்.

நிகழ்வின்போது பீடாதிபதிகள், பதில் பதிவாளர், பீடாதிபதிகள், பேராசிரியர்கள், நிறைவேற்றுதர உத்தியோகத்தர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள் மற்றும் அழைக்கப்பட்ட அதிதிகள் என பலரும் கலந்து கொண்டனர். (அ-06)

# ஹெய்ட்டியில் சிறை உடைத்து 4000 கைதிகள் தப்பியோட்டம்!

## வன்முறைகளால் நாடு பதற்றத்தில்




போர்ட்-ஓ-பிரின்ஸ், மார்ச் 05

**ஹெய்ட்டியின் தலைநகர் போர்ட்-ஓ-பிரின்ஸில் உள்ள பிரதான சிறைச்சாலை மீது ஆயுதமேந்திய குழுவொன்று அண்மையில் நடத்திய தாக்குதலில் 4000 கைதிகள் தப்பியோடியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

சுமார் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகள் அடைக்கப்பட்டுள்ள குறித்த சிறைச்சாலையில், சிறைக் கைதிகளை விடுவிக்கும் விதமாகவே குறித்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த ஆயுததாரிகளால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 4 பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளதோடு, மேலும் 5 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இவ்வாறு தப்பிச் சென்ற கைதிகளில் கடந்த 2021 ஆம் ஆண்டு இடம்பெற்ற அந்நாட்டு ஜனாதிபதி ஜோவெனல் மோஸசின் கொலை வழக்குடன் தொடர்புடைய நபர்களும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஹெய்ட்டியின் அரசாங்கம் வார இறுதியில் வன்முறை வெடித்ததை அடுத்து, 72 மணி நேர அவசரகால நிலையினை அறிவித்துள்ளது.

நாட்டின் இரண்டு பெரிய சிறைச்சாலைகளில் மீதான தாக்குதலை அடுத்து ஆயிரக் கணக்கான கைதிகள் தப்பியோடியுள்ளனர். வன்முறையினால் பலர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# அமெரிக்கா -தென் கொரியா கூட்டு பயிற்சியில் அதிகளவு படையினர்!

## வட கொரியாவின் அணுவாயுத அச்சுறுத்தல் அதிகரிப்பினால்




நியூயோர்க், மார்ச் 05

தென்கொரியா-அமெரிக்கா ஆகிய நாடுகள் கூட்டு இராணுவப் பயிற்சியை ஆரம்பித்துள்ளன. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் இராணுவத் துருப்பினை இருமடங்காக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வட கொரியாவினால் அணுவாயுத அச்சுறுத்தல் அதிகரித்துள்ள நிலையில் கூட்டுப்பயிற்சியில் இராணுவத்தினர். அதிகரிக்கப்பட்டுள்ளனர். இராணுவப் பயிற்சி எதிர்வரும் 14 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

வட கொரியாவின் அச்சுறுத்தலை எதிர்கொள்ளும் வகையில் நேசநாடுகளைப் பலப்படும் வகையில் அமெரிக்கா இந்த கூட்டுப்பயிற்சியினை மேற்கொண்டு வருகின்றது.

(அ)

# உலகம் வெட்கப்படும் வரலாறு பதியப்படும்

## உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி



கீவ், மார்ச 05

உக்ரைனுக்கு ஆயுதங்களை லழங்கும் மேற்கு நாடுகளின் அரசியல் தீர்மானத்தை வரவேற்பதாக ஜனாதிபதி விளடிமீர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் தாக்குதலை முறியப்பதற்கான இராணுவ உதவிகள் கிடைக்காது போனால் உலகம் வெட்கப்படும் வரலாறு ஒன்று ஏற்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உக்ரையனுக்கு அமெரிக்கா வழங்கவிருந்த இராணுவ மற்றும் ஏனைய உதவிகளை காங்கிரஸில் இடம்பெற்ற வேறுபட்ட கருத்துக்களால் தடுக்கப்பட்டுள்ளதாகவும் அதனை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் ஜனாதிபதி விளடிமீர் ஜெலன்ஸ்கி கோரிக்கை விடுத்துள்ளார்.

உக்ரையனுக்கு எதிரான ரஷ்ய இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகி கடந்த மாதத்துடன் இரண்டுவருடங்கள் நிறைவடைந்துள்ளது. (அ)

# நாடு திரும்பினார் நோர்வே மன்னர்

## மலேசிய வைத்தியசாலையில் இருதய சிகிச்சை

ஒஸ்லோ, மார்ச் 05

நோர்வேயின் மன்னர் ஹரால்ட் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை மலேசிய வைத்தியசாலையில் இருந்து வெளியேறினார்.

நோய்த்தொற்றுக்கான சிகிச்சை மற்றும் செயற்கை இருதய முடுக்கியை பெற்ற பின்னர், வைத்தியசாலையிலிருந்து வெளியேறி நோர்வே புறப்பட்டார்.

நோர்வே மன்னர் ஹரால்ட், விடுமுறையில் உடல்நலக்குறைவு ஏற்பட்டு மருத்துவமனையில் பல நாட்கள் கழித்த பின்னர் ஞாயிற்றுக்கிழமை மலேசியாவிலிருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்ததாக அரச மாளிகை தெரிவித்துள்ளது.

87 வயதான ஐரோப்பாவின் மிகப் பழமையான மன்னரான ஹரால்ட், ரிசார்ட் தீவான லங்காவியில் தனிப்பட்ட பயணத்தில் இருந்தபோது உடல் நலக் குறைவினால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.



அரண்மனை சனிக்கிழமையன்று அவருக்கு செயற்கை இருதய முடுக்கி பொருத்தப்பட்டதாகக் கூறியது. இது அவர் பாதுகாப்பாக திரும்ப உதவும் என்று அவரது தனிப்பட்ட மருத்துவர் கூறினார்.

ராணி சோன்ஜா மன்னருடன் பயணம் செய்தார். அவர் நோர்வே திரும்பியதும் வைத்தியசாலையில் பரிசோதிக்கப்படுவார் என்று அரச குடும்பம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

87 வயதான மன்னர் ஹரால்ட் ஐரோப்பாவின் மிகப் பழமையான மன்னர் ஆவார். அவர் 1991 ஜனவரி 17 அன்று மன்னரானார்.

தற்சமயம் மன்னர், இரண்டு வாரங்களுக்கு நோய்வாய்ப்பட்ட விடுப்பில் இருப்பார் என்று அரண்மை கூறியுள்ளது.

அந்த காலகட்டத்தில் பட்டத்து இளவரசர் ஆட்சியாளராக இருப்பார் மற்றும் மன்னரின் அரசியலமைப்பு கடமைகளை மேற்கொள்வார். (அ)

# ஆங்கிலக் கால்வாயை கடக்க முற்பட்ட சிறிய படகு விபத்து

## 7 வயது சிறுமி மரணம் பலர் வைத்தியசாலையில்

பாரிஸ், மார்ச் 05

வடக்கு பிரான்சில் இருந்து பிரித்தானியாவுக்கு 16 புலம்பெயர்ந்தவர்களை ஏற்றிச் சென்ற சிறிய படகு ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை காலை ஆங்கிலக் கால்வாயில் இடம்பெற்ற இந்த விபத்தில் 7 வயது சிறுமியெருவர் உயிரிழந்துள்ளதாக பிரான்சின் நோர்ட் திணைக்களம் தெரிவித்துள்ளது.

படகில் அதிகளவான நபர்கள் பயணம் மேற்கொண்டமையினால் இந்த அனர்த்தம் ஏற்பட்டதாக ஆரம்பக் கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்தின் போது படகில் 10 சிறுவர்களும், கர்ப்பிணிப் பெண்கள் உட்பட மொத்தம் 16 பேர் இருந்துள்ளனர். அவர்களில் எவரும் பாதுகாப்பு அங்கி அணியவில்லை என்று உள்ளூர் அதிகாரி ஒருவர் உறுதிபடுத்தியுள்ளார்.

சம்பவத்தில் மீட்கப்பட்ட அனைவரும் டன்கிர்க்கில் உள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

ஜனவரி 14 அன்று இலங்கிலாந்துக்கு சட்டவிரோத கடல் பயணம் மேற்கொள்ள முயன்ற ஐந்து புலம்பெயர்ந்தோர் இறந்ததைத் தொடர்ந்து அண்மைய மரணம் ஏற்பட்டது.



2023 ஆம் ஆண்டில் 29,000 பேர் சிறிய படகுகளில் இங்கிலாந்தை அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு இதுவரை 2,000க்கும் அதிகமான புலம்பெயர்ந்தோர் இங்கிலாந்துக்கு வந்துள்ளதாக அந் நாட்டு உள்துறை அலுவலக புள்ளிவிவரங்கள் வெளிப்படுத்துகின்றன.(அ)

# கல்வி அதிகாரிகள் அசமந்தபோக்கு அதனாலேயே வினாத்தாள்கள் கசிவு

## அரச ஆசிரியர்களின் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 05

**மேல்மாகாண கல்வி அதிகாரிகளின் அசமந்த போக்கு காரணமாகவே, தவணைப் பரீட்சை தொடர்பான வினாத்தாள்கள் பரீட்சைக்கு முன்னதாக வெளி யானதாக உத்தியோகத்தர்கள் ஒருவருக்கொருவரை குற்றஞ்சாட்டி வருவதாக அரச ஆசிரியர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.**

அந்த சங்கத்தின் பிரதான செயலாளர் ஷெஹான் திசாநாயக்க இதனைத் தெரிவித்துள்ளார்.

பரீட்சை தொடர்பான வினாத்தாள்கள் வெளியானமை தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினர் தற்போது விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாகாண மட்டத்திலும் அது தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக அரச ஆசிரியர்களின் சங்க பிரதான செயலாளர் ஷெஹான் திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, வினாத்தாள்கள் முன்கூட்டியே வெளியானமை காரணமாக எதிர்வரும் மூன்று நாட்களில் நடைபெறவிருந்த 10ஆம் மற்றும் 11ஆம் தரங்களுக்கான இறுதித் தவணை பரீட்சைகளை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக மேல் மாகாண கல்விப் பணிப்பாளர் நிமல் ஜயவீர தெரிவித்துள்ளார்.

# வல்வெட்டித்துறையில் இரத்ததானம்!



யாழ்ப்பாணம், மார்ச் 05

வல்வெட்டித்துறை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஒழுங்கமைப்பில் 75 ஆவது இரத்த தான முகாம் நேற்று முன் தினம் நடைபெற்றது.

50 தடவைக்கு மேல் இரத்த தானம் செய்தவரும் வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரிச் சங்க உறுப்பினருமான சக்திவேலின் ஒருங்கிணைப்பில் இந்த இரத்த தானம் முகாம் இடம்பெற்றது.

பிரதேச வைத்தியசாலை பொறுப்பு வைத்திய அதிகாரி தலைமையில் இடம்பெற்ற இரத்த தான முகாமில், சேகரிக்கப்பட்ட இரத்தங்களை யாழ்ப்பாணம் இரத்த வங்கி அதிகாரிகள் வருகை தந்து பெற்றுக் கொண்டனர்.

இதன்போது 80 இற்கும் மேற்பட்டோர் இரத்த தானம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கென்யா, ஐக்கிய அரபு இராச்சியத்தில் இலங்கை அரிசிக்கு அதிகளவு கேள்வி!

கொழும்பு, மார்ச் 05

கென்யா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் உள்ளிட்ட பல நாடுகளில் இலங்கை அரிசிக்கான கேள்வி அதிகரித்து வருவதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, கென்யாவிலிருந்து 10,000 மெற்றிக் தொன் அரிசிக்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதேநேரம், மத்திய கிழக்கின் பல நாடுகளும் கீரி சம்பா அரிசிக்கான வேண்டுகோள் சமர்ப்பித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

# கொத்து, ப்ரைட் ரைஸ் உள்ளிட்ட பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எதிராக சட்ட நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 05

கொத்து, ப்ரைட் ரைஸ் உள்ளிட்ட உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தேசிய நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

உணவுப் பொருட்களின் விலைகளை அதிகரிக்க அகில இலங்கை சிற்றுண்டிசாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானத்திற்கு எதிராகவே இந்த சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

சந்தையில், உணவுப்பொருட்களின் விலைகளை தன்னிச்சையாக தீர்மானிக்கும் அதிகாரம் தனியார் நிறுவனங்களுக்கு இல்லை என அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாகவே, உணவுப் பொருட்களின் விலைகளை உயர்த்த நேரிட்டதாக அகில இலங்கை சிற்றுண்டிசாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# அத்தியாவசிய சேவைகளாக மேலும் சில துறைகள் பிரகடனம்

கொழும்பு, மார்ச் 05

மின்சாரம் மற்றும் பெற்றோலிய பொருட்கள் விநியோகம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் அத்தியாவசிய சேவைகளாக வர்த்தமானி மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, மின்சாரம் மற்றும் பெற்றோலிய பொருட்கள் மற்றும் எரிபொருளின் விநியோகம் அல்லது விநியோகம் ஆகியவற்றுடன் இணைக்கப்பட்ட அனைத்து சேவைகளும் அத்தியாவசிய சேவைகளாக கருதப்படுகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவின் பேரில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் வெளியிடப்பட்ட இந்த அறிவிப்பில் இந்த சேவைகள் அத்தியாவசியமான பொது சேவைகளாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மின்சாரம், பெற்றோலியம் விநியோகம் அல்லது எரிபொருள் வழங்கல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள பொது நிறுவனங்கள், அரசுத் துறைகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் உட்பட அனைத்து நிறுவனங்களுக்கும் இது பொருந்தும். (அ)

# பாடசாலை மாணவி நீரில் மூழ்கி மரணம்

கொழும்பு, மார்ச் 05

எல்பிட்டிய, எபித்தங்கொட கால்வாயில் நீராடச் சென்ற சிறுமி ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இந்த சிறுமி தனது தாய் மற்றும் சகோதரியுடன் நேற்று முன் தினம் மாலை எபித்தங்கொட கால்வாயில் நீராடச் சென்றுள்ளார்.

இதன்போது அவர்கள் மூவரும் நீரில் மூழ்கியுள்ள நிலையில், பின்னர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அங்கு சிறுமி உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கனேகொட, கெபத பகுதியில் வசிக்கும் 14 வயதுடைய பாடசாலை மாணவியே இவ்வாறு உயிரிழந்தார்.

அவரது தாயும் சகோதரியும் ஆபத்தான நிலையில் எல்பிட்டிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எல்பிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# வளர்ப்பு நாயால் மோதல் ஹிக்கடுவவில் ஒருவர் பலி

## மூவர் வைத்தியசாலையில்

கொழும்பு, மார்ச் 05

வளர்ப்பு நாயொன்று சம்பந்தப்பட்ட சம்பவத்தினால், ஹிக்கடுவை கோனாபினுவல கிராமத்தில் சனிக்கிழமையன்று இரண்டு அயல் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இடையில் ஏற்பட்ட வன்முறை மோதலில், 34 வயதுடைய நபர் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

34 வயதுடைய லெக்கடபாலகே தினேஷ் பிரசங்க என்பவர் தாக்கப்பட்டு உயிரிழந்துள்ளதாகவும், அவரது அண்டை வீட்டாரான 23 வயதுடைய நபரொருவர் கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெலிக்கட பொலிஸார் தெரிவித்தனர்.

இரு அயல் குடும்பங்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலை அடுத்து உயிரிழந்தவரின் மனைவி மற்றும் சந்தேகநபரின் தந்தை மற்றும் தாய் ஆகியோர் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பிரதான சந்தேகநபரின் வீட்டில் வளர்க்கப்பட்ட நாய் ஒன்று வேலை முடிந்து வீடு திரும்பும் போது அவர் மீது பாய்ந்ததை அடுத்து இரு குடும்பங்களுக்கு இடையில் ஏற்பட்ட வார்த்தைப் போர் பின்னர் உடல் ரீதியான வன்முறையாக மாறியது.

உயிரிழந்தவர் 23 வயதுடைய சந்தேக நபரின் தந்தையை கோடரியால் தாக்கி அவருக்கு பலத்த காயங்களை ஏற்படுத்தியிருந்தார். சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தனது அண்டை வீட்டாரை கட்டையால் அடித்துக் கொன்றுள்ளார். கோடரியால் தாக்கப்பட்டதில் காயமடைந்த நபர் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகவும் அவருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# மீனவர்கள் இடையே முறுகல் பொலிஸாருடனும் முரண்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 05

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணியில் மீனவர்கள் இடையே நேற்று முன் தினம் முறுகல் நிலை ஏற்பட்டது.

வெற்றிலைக்கேணி கடற்றொழிலாளர் சங்கத்திற்குட்பட்ட கடல் பகுதியில் உழவு இயந்திரம் பாவித்து கரைவலை தொழில் செய்வதற்கு குறித்த சங்கத்தால் தடை விதிக்கப்பட்டது.

உடனடியாக உழவு இயந்திரம் பாவித்து கரைவலை தொழில் செய்வதை நிறுத்துமாறு வெற்றிலைக்கேணி மீனவர்களின் கையொப்பத்துடன் வெற்றிலைக்கேணி கடற்றொழிலாளர் சங்கத்தினரால் கரைவலை தொழில் சம்மாட்டியிடம் கடிதம் கையளிக்கப்பட்டது.




எனினும் தமது அறிவுறுத்தலை பொருட்படுத்தாது தொடர்ச்சியாக உழவு இயந்திரம் பாவித்து கரைவலை தொழில் செய்துவருவதால் நேற்று முன் தினம் காலை குறித்த கரைவலை வாடி, மீனவர்களால் முற்றுகையிடப்பட்டு உழவு இயந்திரம் மூலம் கரைவலை இழுப்பது நிறுத்தப்பட்டது.

சம்பவ இடத்தில் அதிகளவான மீனவர்கள் ஒன்று கூடியதால் சிறிது நேரம் பதற்றம் நிலவியதுடன் சம்பவ இடத்திற்கு வருகை தந்த மருதங்கேணி பொலிஸாருடனும் மீனவர்கள் முறுகலில் ஈடுபட்டனர்.

உடனடியாக உழவு இயந்திரம் பாவித்து கரைவலை தொழில் செய்வதை நிறுத்தாவிடில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடப்போவதாகவும் அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

## இலங்கையின்...

தடைச் சட்டத்துக்கு பதிலாக இலங்கை சர்வதேச கடப்பாடுகளுக்கு இசைவான சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று தொடர்ந்தும் நாம் வலியுறுத்துகிறோம். பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 9 பேர் கடந்த நவம்பரில் விடுதலை செய்த தையும், இலங்கை பயங்கரவாத தடைச் சட்டத்தை பயன்படுத்தாமல் பேணுவ தையும் நாம் ஊக்குவிக்கின்றோம்.

உண்மை, ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவை நிறுவுவதற்கான அரசாங்கத்தின் முயற்சி களை நாங்கள் அவதானிக்கிறோம். இதே நேரம், எந்தவொரு சட்டத்தின் முன்னோ டியாக நம்பிக்கையை உருவாக்குவதற்கு பங்கேற்பு செயல்முறையின் முக்கியத் துவத்தை வலியுறுத்துகிறோம்.

எந்தவோர் எதிர்கால ஆணைக்குழு வும் சுயாதீனமாகவும் வெளிப்படையா கவும் இருக்கவேண்டும். பாதிக்கப்பட்ட சமூகங்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய வேண்டும். முந்தைய நிலைமாறு கால நீதிச் செயல்முறைகளை கட்டியெ ழுப்பவும் - பொறுப்புக்கூறலுக்கான வழியை ஏற்படுத்தவும் வேண்டும்.

அடிப்படை சுதந்திரம் மற்றும் குடிமை வெளிகளுக்கு (குடிமைவெளி என்பது மக்கள் நிகழ்நிலை (ஒன்லைன்) மூலம் ஒருவரை ஒருவர் சுதந்திரமாகவும் தடையின்றியும் தொடர்பு கொள்ளவும் - ஒன்றுகூடவும் அனுமதிக்கிறது. இந்த ஒன்றுகூடல் எதிர்ப்பு தெரிவிக்கும் வித த்திலோ அல்லது ஆதரவு தெரிவிக்கும் விதத்திலோ அமையலாம்.) தீவிரமான தாக்கங்களை கொண்ட பிற சட்டங் களை அரசாங்கம் முன்வைக்கும்போது சிவில் சமூகம் உட்பட பங்குதாரர்களு டன் விரிவான ஆலோசனைகளையும் இவ்வாறான சட்டமியற்றும் செயல் முறைகளையும் ஊக்குவிக்கிறோம்.

வடக்கு, கிழக்கில் காணி விடுவிப்பு தொடர்பான அரசாங்கத்தின் உறுதி மொழிகளை வரவேற்கிறோம். ஆனால், வடக்கில் குறிப்பாக கிழக்கில், காணி அபகரிப்பு பதற்றங்கள் பற்றிய கவலை அறிக்கைகளை கவனத்தில் கொள்கிறோம்.

மேற்குறிப்பிட்ட மற்றும் பிற சவால் களை எதிர்கொள்ள மனித உரிமைகள் ஆணையாளருடனும் பணிமனையுட னும் இணைந்து செயல்படுமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத் துகிறோம். மேலும், மனித உரிமைகள் பேரவையின் 51/1 தீர்மான விடயத்தில் இலங்கைக்கு ஆதரவளிக்க தயாராக இருக்கிறோம் - என்றுள்ளது. (ஐ)

## 62 புதிய...

அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்கி-நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு உலக நாடுகள் ஏற்றுக்கொள்ளும் சட்டங் களை அறிமுகப்படுத்த வேண்டியது அவசியம். பொது நிதி முகாமைத்துவ சட்டம், பொதுக் கடன் முகாமைத்துவச் சட்டம், விவசாயச் நவீனமயமாக்கல் சட்டம் என்பவற்றைப் போன்றே இந்த அனைத்து இலக்குகளை அடையக்கூடிய பொருளாதார மாற்றச் சட்டம் கொண்டு வரப்படும்.

தற்போதுள்ள முதலீட்டுச் சபைக்குப் பதிலாக முதலீட்டு ஆணைக்குழுவொன்று உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தேசிய உற்பத்தி ஆணைக்குழு நிறுவப் படும். அத்தோடு சுற்றுலா தொடர்பான புதிய சட்டம், காலநிலை மாற்றம் தொடர்பான சட்டம், புதிய சுற்றுச்சூழல் சட்டம், சிங்கராஜா, சிவனொளிபாத மலை, ஹோர்ட்டன் சமவெளி, வஸ்கமுவ வனப் பூங்கா என்பவற்றின் பாதுகாப்புக் காக புதிய சட்டங்கள் கொண்டுவருவ தற்கு நாம் எதிர்பார்க்கின்றோம்.

இப்புதிய சட்டங்கள் கொண்டு வரு வதை சிலர் தடுக்க முயன்றாலும் பாரா ளுமன்றத்தில் நிறைவேற்றிய பின்னர் அந்த சட்டங்களை யாராலும் இரத்து செய்யவோ அல்லது மறைமுகமாக செயல்படுத்தாதிருக்கவோ முடியாது- என்றார். (அ)

## ரஷ்யா...

எதனையும் அளிக்காதே இவர்கள் ரஷ்யாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இவ்வாறு ரஷ்யா சென்ற இலங்கை யர்களை அந்நாட்டு இராணுவத்தில் பலவந்தமாக இணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

என்றாலும், மோசடியாளர்களிடம் இருந்து தப்பிய இலங்கையர்கள் மீண்டும் தாயகம் திரும்பியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் உரிய நடவடிக் கைகளை எடுப்பதற்கான தகவல்களை பாதுகாப்பு தரப்பிடம் வழங்க தாயகம் திரும்பிய இலங்கையர்கள் நடவடிக்கை களை எடுத்துள்ளனர்.

இலங்கையில் மக்கள் எதிர்கொண் டுள்ள பொருளாதார நெருக்கடியை பயன்படுத்தி வெளிநாடுகளில் வேலை வாய்ப்புகள் இருப்பதாக போலி தகவல்களை வழங்கி மோசடியான முறையில் அனுப்பப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச் சியாக பதிவாகி வருகின்றன. அண்மை யில், தாய்லாந்தில் வேலைவாய்ப்புகள் இருக்கின்றன என்று கூறி அனுப்பப் பட்ட இலங்கையர்கள் மியான்மரில் உள்ள தீவிரவாத குழுவிடம் சிக்கிய சம்பவங்கள் பெரும் பரபரப்பை ஏற்படுத் தியிருந்தன.

இவர்களை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகள் தொடர்ச்சியாக எடுக்கப் பட்டுவரும் பின்புலத்தில் மோசடியான முறையில் இலங்கையர்களை வெளிநாடு களுக்கு அனுப்பு வியாபாரம் சூடு பிடித் துள்ளது.

அது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் கோரிக்கை விடுத்துள்ளது.

சட்டப்பூர்வமாக பதிவுசெய்யப்பட் டுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களை கண்டறிந்து அவற்றின் ஊடாக வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் கோரிக்கை விடுத்துள்ளன. (அ)

## மின்சாரக்...

ஜனவரி மாதம் 3.34 சதவீதத்தாலும் பெப்ரவரியில் 14 சதவீதத்தாலும் மின்சா ரக் கட்டணத்தை குறைப்பதற்கு இலங்கை மின்சார சபை பரிந்துரைத்தது. எனினும், மக்களிடம் பெறப்பட்ட யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு 21.9 வீதத் தால் மின்சார கட்டணத்தைக் குறைக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்தது.

இதற்கமையவே, நள்ளிரவு முதல் மின்சார கட்டணம் திருத்தப்பட்டது.

வீட்டு பயன்பாட்டுக்கான மின்சாரம் முதல் 30 அலகுகளுக்கு 33 சதவீதம் குறைக்கப்பட்டது. இதன்படி, நிலை யான கட்டணம் 180 ரூபாயிலிருந்து 150 ரூபாயாகவும் ஓர் அலகுக்கான மின்சார கட்டணம் 12 ரூபாயில் இருந்து 8 ரூபா யாகக் குறைக்கப்பட்டது.

31 முதல் 60 அலகுகளுக்கு 28 சதவீத மும் 61 முதல் 90 வரையான அலகுக ளுக்கு 30 சதவீதம் குறைந்தது. நிலை யான கட்டணம் 360 ரூபாயிலிருந்து 300 ரூபாயாகவும் ஓர் அலகுக்கான கட்டணம் 30 ரூபாயில் இருந்து 20 ரூபாயாகவும் குறைக்கப்பட்டது.

90 முதல் 180 வரையான அலகுகளுக்கு 24 சதவீதத்தாலும் 180 அலகுகளுக்கு மேல் 18 சதவீதத்தாலும் மின்சார கட்ட ணம் குறைக்கப்பட்டது.

இதேபோன்று, மதத் தலங்களுக்கான மின்சார கட்டணம் 33 சதவீதத்தாலும் பொது பாவனைகளுக்கான மின்சாரக் கட்டணம் 23 சதவீதத்தாலும், அரச நிறு வனங்களுக்கான கட்டணம் 22 சதவீதத் தாலும் குறைக்கப்பட்டது.

தவிர, ஹோட்டல்கள் மற்றும் கைத் தொழில் துறைகளுக்கான கட்டணம் 18 சதவீதத்தாலும் வீதி மின்விளக்குகளுக் கான கட்டணம் 20 சதவீதத்தாலும் குறைவடைந்தது. (ஐ)

# இலாபத்தில் மின்சார சபை

கொழும்பு, மார்ச் 05

இலங்கை மின்சார சபை கடந்த 2023ஆம் ஆண்டில் அதிக இலாபத்தை ஈட்டியுள்ளதாக தகவல்கள் வெளியா கியுள்ளன.

மின்சார கட்டணங்களை என்றுமில் லாத அளவிற்கு அதிகரித்தமையே இதற் கான காரணம் என்று தெரிய வந்துள் ளது. கடந்த 2023ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதியன்று வெளியடப்பட்ட கணக்காய்வு அறிக்கையின்படி, சுமார் 61.2 பில்லியன் ரூபாவை இலங்கை மின் சார சபை வருமானமாகப் பெற்றுள்ளது.

ஏனைய முதலீடுகளையும் சேர்த்து 75.7 பில்லியன் ரூபாவை ஈட்டியிருந்தது.

இந்நிலையில், கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் 18 வீத கட்டண அதிகரிப் பினால் 21 பில்லியன் ரூபாய் இலாபமாக பெற்றுள்ளது.

பெரும்பாலும் கடந்த ஒக்ரோபர் முதல் டிசெம்பர் வரையிலான காலப்பகு தியிலேயே இவ்வாறு அதிக இலாபம் கிடைக்கப்பெற்றுள்ளது. நீர்மின் நிலை யங்கள் ஊடாக போதுமான மின்சாரம் உற்பத்தி செய்த காரணத்தினால், ஏனைய நிலக்கரி மற்றும் எண்ணெய் ஆகியவற் றைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் உற்பத்தி குறைந்தமையும் இலாபமீட் டுவதற்கு காரணமாக அமைந்துள்ளதாக அறிய முடிகின்றது. (அ)

## தமிழ் எம். பி...

கொடுக்கப்பட வேண்டியவை அல்ல. மாநில அரசான தமிழ்நாடு அரசாங் கத்தாலேயே செய்து கொடுக்கப்பட வேண்டியவை.

எனவே, அங்கு துன்பப்படும் ஈழத் தமிழ் மக்களுக்காக இங்குள்ள பாரா ளுமன்ற உறுப்பினர்கள் தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுடன் பேசி அவர்களின் பிரச்னைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் - என்றார். (ஐ- 02)

## மண்ணுக்கு...

வித்துடல் கடந்த வெள்ளிக்கிழமை நாட்டுக்கு கொண்டுவரப்பட்டது. வவுனியாவிலிருந்து ஊர்தி பயணமாக அவரின் சொந்த இடமான உடுப்பிட் டிக்கு நேற்று முன்தினம் கொண்டுவரப் பட்ட சாந்தனின் வித்துடலுக்கு பல்லா யிரக்கணக்கான மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

தீருவிலில் மக்கள் அஞ்சலி நிறைவு பெற்ற பின்னர் நேற்று முன்தினம் இரவு சாந்தனின் சகோதரியின் வீட்டுக்கு கொண்டுசெல்லப்பட்டது. அங்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்றன. இறுதிக் கிரியை நிறைவில் சாந்தனின் வித்துடல் வைக்கப்பட்டிருந்த சவப்பேழைக்குள் திருநீறு நிறைக்கப் பட்டு மூடப்பட்டது.

இதைத் தொடர்ந்து மதியம் 12.45 மணியளவில் சாந்தனின் இறுதிப் பயணம் ஆரம்பமானது.

இலக்கணாவத்தை சனசமூக நிலையத் தில் அவரின் வித்துடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு அங்கு அஞ்சலி உரைகள் ஆற்றப்பட்டன. சட்டத்தரணி புகழேந்தி, அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அஞ்சலி உரையை நிகழ்த்தினர். இதைத் தொடர்ந்து மதியம் 1.30 மணியளவில் அங்கிருந்து சாந்தனின் வித்துடல் அவரின் தாயார் வசித்த பூர்வீக வீட்டுக்கு எடுத் துச் செல்லப்பட்டது. பின்னர், தருமகுல சிங்கம் சனசமூகநிலையத்தில் மக்கள் அஞ்சலி இடம்பெற்றது. இதன்பின்னர், வித்துடல் உடுப்பிட்டி சந்தியை அடைந் தது. அங்கிருந்து தொண்டைமானாறு வீதி வழியே பயணித்து பொக்கணை சந்தியை அடைந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் இல்லம் இருந்த காணியில் சாந்தனின் வித்துடல் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வு நடை பெற்றது.

பின்னர் அங்கிருந்து வல்வெட்டித் துறை சந்தியை அடைந்து ஊறணி ஊடாக பொலிகண்டி சந்தியை அடைந் தது அங்கிருந்து எள்ளங்குளம் இந்து மயானத்தை அடைந்தது. அங்கு சாந்த னின் வித்துடல் இரவு 7.10 மணியளவில் விதைக்கப்பட்டது. இதன்போது, சாந்தன் மிகுந்த சமய நம்பிக்கை உடையவர் என் பதால் அவரின் தாயாரின் விருப்பப்படி திருநீறு தூவப்பட்டு அவரின் வித்துடல் விதைக்கப்பட்டது.

சாந்தனின் இறுதி ஊர்வலத்தில், அரசியல் பிரமுகர்கள், உறவினர்கள், பொதுமக்கள் என ஆயிரக்கணக்கான வர்கள் பங்கேற்றனர். (ஐ-02)

## துப்பாக்கி சூட்டில் ஒருவர் மரணம்!

கொழும்பு, மார்ச் 05

வன விலங்குகளை வேட்டை யாடுவதற்காக மேற்கொள்ளப் பட்ட துப்பாக்கி சூட்டில் நபர் ஒருவர் காயமடைந்து மஹியங் கனை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தாரென பொலிஸார் தெரிவித்தனர்.

கிராதுருகொட பகுதியைச் சேர்ந்த 62 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார். (அ)

## எரிபொருட்களின்...

ஒன்றின் விலை 9 ரூபாயால் குறைக் கப்பட்டு 447 ரூபாயாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது.

இதேபோன்று சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாயால் குறைக்கப் பட்டு 458 ரூபாயாகவும் மண்ணெண் ணெய் லீற்றர் ஒன்றின் விலை 5 ரூபா யால் குறைக்கப்பட்டு 257 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. (ஐ)

## இந்திய...

லாளர்கள், சவுக்கடி கடற்பரப்பில் இருந்து இலங்கை எல்லைவரை சென்று கறுப்புக்
கொடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 20 படகுகளில்,32 மீனவர்கள் கறுப்பு கொடிகளை படகில் காட்டி யவாறு கடலில் சுமார் 30 நிமிடங்கள் வரை போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து சவுக்கடி கடற்படை முகாம் முன்பாக கவனவீர்ப்பு போராட்டத்தி லும் ஈடுபட்டனர்.

இந்நிலையில், இந்திய எல்லைக்குள் நுழைந்து போராட்டம் நடத்தப் போவ தாக மீன்பிடி சமாஜங்களின் கூட்டுறவு சங்கத்தலைவர் பிரான்சிஸ் ரட்ணகுமார் எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

"இதற்கு முன்னரும் அத்துமீறிய இந்திய கடற்றொழிலாளர்களை கட்டுப் படுத்துமாறு கோரி பல போராட்டங் களை முன்னெடுத்தோம். ஆனால், தொடர்ந்தும் அவர்களது வருகை இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் எமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் வெளிப்படுத்தும் முகமாக கடல் வழியாக இலங்கை எல்லை வரை எமது கறுப்புக் கொடிப் போராட்டத்தை முன்னெடுத்தோம்.

இந்தப் போராட்டம் ஒரு ஆரம்பப் போராட்டமாகவே பார்க்கிறோம். ஏனெனில், நாம் எமது கடல் எல்லை வரை போராட்டத்தை முன்னெடுத் தோம் இந்திய எல்லைக்கு செல்லவில்லை.

இந்தியா எல்லைக்கு செல்வோமாயின் என்ன நடக்கும் என்பதும் எமக்குத் தெரியும். அது பற்றி நாம் கவலைப்பட மாட்டோம். உயிர்ச்சுறுத்தல் வந்தாலும் எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கின் றோம்.

அதற்குப் பதிலாக இந்தப் பிரச்னையை சுமுகமாகத் தீர்த்துக் கொள்வதற்கு எமது கோரிக்கைகளை இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் உரிய நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டும்" என தெரிவித்துள்ளார். (அ)

ஈழநாடு Eelanadu

## மர்மமாக உயிரிழந்த வைத்தியர்

கொழும்பு, மார்ச் 05

கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் எக்ஸ்ரே பிரிவில் பணியாற்றிய வைத்தியர் ஒருவர் மர்மமான முறையில் அவரது வீட்டில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

காலி, தலகஹஹேன பதுமங்க பகுதியைச் சேர்ந்த பிரபாத் சாமர சம்பத் என்ற 37 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த வைத்தியரின் மனைவியும் கராப்பிட்டிய வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர் ஆவார்.

சம்பவம் இடம்பெற்ற போது மனைவி வீட்டில் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த வைத்தியரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக கராப்பிட்டிய சட்ட வைத்திய பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் காலி பொலிஸின் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## கொக்குத்தொடுவாய் புதைகுழி வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

முல்லைத்தீவு, மார்ச் 05

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணிக்கான நிதி கிடைக்கப்பெறாத நிலையில், மனித புதைகுழி அகழ்வு தொடர்பான வழக்கானது எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதிக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு தொடர்பான வழக்கு நேற்று முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் இடம்பெற்ற வழக்கு விசாரணைகளில் முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா, முல்லைத்தீவு மாவட்ட செயலக பிரதம கணக்காளர் மயில்வாகனம் செல்வரட்ணம், கொக்கிளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கொக்கிளாய் பகுதி கிராம அலுவலர், சட்டத்தரணிகளான வீ.எஸ். நிறஞ்சன், கணேஸ்வரன், தனஞ்சயன், ருஜிக்கா ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்

குறித்த வழக்கின் அகழ்வு பணியினை திட்டமிட்டபடி நடாத்த நிதி கிடைக்கப்பெறவில்லை என தெரிவிக்கப்பட்ட நிலையில் குறித்த வழக்கு ஏப்ரல் மாதம் 4 ம் திகதிக்கு மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குதொடுவாய் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழியின் முதல் கட்ட அகழ்வானது 06.09.2023 அன்று ஆரம்பமாகி பதினொரு நாட்கள் நடைபெற்று 17 உடற்பாகங்கள் மீட்கப்பட்ட நிலையில் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

மீண்டும் அகழ்வின் இரண்டாம் கட்ட பணிகள் கடந்த 20.11.2023 அன்று ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக ஒன்பது நாட்கள் நடைபெற்று 40 எலும்புக்கூட்டு தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளதுடன் இரண்டாம் கட்ட அகழ்வுப்பணி இடைநிறுத்தப்பட்டிருந்தது.

அத்தோடு அகழ்வு ஆய்வு நடவடிக்கையின் இறுதி நாட்களில் மேற்கொள்ளப்பட்ட ஸ்கான் பரிசோதனை மூலம் மனித புதைகுழிக்கு மேற்கு பக்கமாக இரண்டு மீற்றர் நீளத்திற்கு உடலங்கள் காணப்படுவதாக பரிசோதனை மூலம் கண்டறியப்பட்டிருந்தது.

அதனையடுத்து குறித்த அகழ்வுப்பணியின் மூன்றாவது கட்டம் இவ்வருடம் மார்ச் மாதம் நடைபெற திட்டமிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நிறைவேற்று அதிகார முறை எங்கள் ஆட்சியில் நீக்கப்படும்

### கூறுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, மார்ச் 05

**தேசிய மக்கள் சக்தி ஆட்சியின்கீழ் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நிச்சயம் நீக்கப்படும் என்று அக்கட்சியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும், ஜே.வி.பியின் செயலாளருமான ரில்வின் சில்வா தெரிவித்தார்.**

ஜே.வி.பி. தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஜனாதிபதி தேர்தலா அல்லது பொதுத்தேர்தலா முதலில் நடத்தப்படும் என்பது எமக்கு பிரச்னை கிடையாது. எந்த தேர்தல் நடத்தப்பட்டாலும் இந்த ஊழல் மிகு ஆட்சியாளர்களை, அரசியல்வாதிகளை விரட்டியடிப்பதற்கும், புதியதொரு ஆட்சியை உருவாக்குவதற்கும் நாட்டு மக்கள் தயாராகவே உள்ளனர்.

தேர்தல் காலம் நெருங்கியுள்ள நிலையில் அதனை இலக்கு வைத்து பொருட்கள் விநியோகிக்கும் நடவடிக்கை தற்போது ஆரம்பமாகியுள்ளது. 20 கிலோ அரிசி வழங்க பார்க்கின்றனர். தண்ணீர் மோட்டர் என பழைய விளையாட்டு மீண்டும் அரங்கேறப்படுகின்றது.

அரச அதிகாரிகளால் வழங்கக்கூடிய காணி உரித்து பத்திரத்தைக்கூட மக்களை வரவழைத்து ஜனாதிபதி வழங்குகின்றார். இது தேர்தல் பிரசாரமாகும். இந்த



மோசடி - பழைய விளையாட்டு மக்கள் மத்தியில் இனியும் எடுபடாது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும். ஜனநாயக முறைமையிலான ஆட்சிக்கட்டமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும். பாராளுமன்றத்தில் மக்களின் இறைமை பிரதிபலிக்கப்பட வேண்டும். இதனை செய்யக்கூடிய ஒரே கட்சி தேசிய மக்கள் சக்தியாகும்.

ஜனாதிபதி தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்ற பின்னர் பொதுத்தேர்தல் நடத்தப்படும். அத்தேர்தல் ஊடாக பலமான அரசு நிறுவப்படும். அதன்பின்னர் புதிய அரசமைப்பு இயற்றப்படும். ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை பாதுகாக்கக்கூடிய வகையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும்-என்றார். (அ)

## ரஷ்யாவிலுள்ள இராணுவ முகாமிலிருந்து 17 இலங்கையர்கள் தப்பி நாடு திரும்பினர்!

கொழும்பு, மார்ச் 05

வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடியில் சிக்கி ரஷ்யாவிலுள்ள இராணுவ முகாமில் பணியமர்த்தப்பட்டிருந்த 17 இலங்கையர்கள் குறித்த முகாம்களில் இருந்து தப்பிய நிலையில் நாடு திரும்பியுள்ளனர்.

அத்துடன், 50 இற்கும் மேற்பட்ட மேலும் பல இலங்கையர்கள் நாட்டுக்கு திரும்பிவர முடியாமல் ரஷ்ய இராணுவ முகாம்களில் இருப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ரஷ்யாவுக்கும் யுக்ரைனுக்கும் இடையிலான யுத்தத்தின் மத்தியில், அரசாங்கத்தின் தலையீடு இன்றி ரஷ்யாவுக்கு இராணுவ சேவைக்காக பாதுகாப்புப் படையினர் மற்றும் ஏனைய பொதுமக்களை அனுப்பும் மோசடி தொடர்பான விடயங்கள் குறித்து எமது சேவை ஊடாக கடந்த மாதம் 4 ஆம் திகதி வெளிக்கொண்டு வரப்பட்டிருந்தது. (அ)

## ஐ.நாவின் உதவியுடன் சூரிய சக்தியில் இயங்கும் நடமாடும் வைத்தியசாலை!

கொழும்பு, மார்ச் 05

ஐக்கிய நாடுகள் சபையின் மக்கள் தொகை நிதியத்தில் இருந்து நாட்டின் சுகாதார சேவையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இரண்டரை மில்லியன் அமெரிக்க டொலருக்கும் அதிகமான நிதி வழங்கப்பட்டுள்ளது.

குறித்த தொகை அத்தியாவசிய மருந்துகள் மற்றும் உபகரணங்கள் போன்றவற்றுக்காக வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் 3 நடமாடும் அம்சமும் இதில் உள்ளடங்கியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த நடமாடும் அலகுகளும் சூரிய சக்தியில் இயங்கும் மருத்துவமனையுடன், மகளிர் மருத்துவ பிரிவு மற்றும் அனைத்து மருத்துவ உபகரணங்களுடன் உள்ளடங்குவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எந்தவொரு அவசர நிலையிலும் தேவையான பிரதேசங்களில் சுகாதார சேவைகளுக்கு பயன்படுத்துவதற்கு தயாராக உள்ள இந்த நடமாடும் வாகனங்களின் பெறுமதி ஐந்து இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கு மேல் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## இலஞ்ச ஊழல் வழக்கில் ஆஜராக தயாராகும் விமல்

கொழும்பு, மார்ச் 05

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தமக்கு எதிராக நிலுவையில் உள்ள இலஞ்ச ஊழல் வழக்கில் ஆஜராகவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பாதுக்க பிரதேசத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச 2010ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையில் ஆட்சியில் இருந்தபோது 75 மில்லியன் ரூபா சொத்து மதிப்பு தொடர்பில் குறிப்பிட மறுத்துள்ளார்.

இதனை தொடர்ந்து , கடந்த நல்லாட்சி காலத்தில் விமல் வீரவன்சவுக்கு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

இது தொடர்பான வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தால் கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு அழைக்கப்பட்டது.

விமல் வீரவன்ச தரப்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி மருத்துவ அறிக்கை ஒன்றினை நீதிமன்றில் சமர்ப்பித்திருந்தார்.

கடந்த சில நாட்களாக காய்ச்சல், வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கினால் விமல் வீரவன்ச பாதிக்கப்பட்டு இருப்பதாகவும், ஏழு நாட்கள் ஓய்வில் இருக்குமாறு வைத்தியர்கள் ஆலோசனை வழங்கியிருப்பதாகவும் குறித்த மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச பல்வேறு சுகயீன காரணங்களை காட்டி மன்றில் முன்னிலையாகாது தவறுவதாக ஏற்கனவே இலஞ்ச ஊழல் ஆணைக்குழு நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தது.

இந்த வழக்கு மீதான விசாரணைகள் கடந்த வருடம் செப்டம்பர் மாதம் 13 ஆம் திகதியன்று நீதிமன்றில் அழைக்கப்பட்டபோதும், சந்தேகநபர் மன்றில் முன்னிலையாகவில்லை.

இதனால், விசாரணைகளை நிறைவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி அயேஷா ஜினசேன தெரிவித்தார்.

சந்தேகநபர் காலம் தாழ்த்தாது உடனடியாக தகுந்த மருத்துவரை சந்தித்து சிகிச்சை பெறுவது சிறந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதன் பின்னர் விசாரணைகளை நிறைவு செய்வதற்கான திகதியை நிர்ணயம் செய்யுமாறு நீதிமன்றில் கோரிக்கை விடுக்கப்பட்டது. இது தொடர்பில் பரிசீலித்த நீதிபதி நவரத்ன மாரசிங்க குறித்த வழக்கை எதிர்வரும் 22ஆம் திகதி மீண்டும் அழைக்க உத்தரவிட்டார்.

அன்றைய தினத்தில் குற்றம் சாட்டப்பட்ட நபர் நிச்சயம் நீதிமன்றில் ஆஜராக வேண்டுமெனவும் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், நேற்று முன் தினம் பாதுக்க பிரதேசத்தில் ஊடகவியலாளர்கள் அவரின் சுகயீனம் குறித்து கேள்விகளை கேட்ட போது, அதற்கு பதிலளிக்கும் விதமாக, அவர் தற்போது குணமடைந்து வருவதாக தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.03.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# ஹைதராபாத் அணியின் தலைவரானார் கம்மின்ஸ்

ஹைதராபாத், மார்ச் 05

ஹைதராபாத் சன் ரைசர்ஸ் தனது அணியின் தலைவராக அவுஸ்திரேலியாவின் பட் கம்மின்ஸை அறிவித்துள்ளது.

டுபாயில் நடந்த ஐ. பி. எல். ஏலத்தில் 20.5 கோடி இந்திய ரூபாய்க்கு பட் கம்மின்ஸை ஏலத்தில் எடுத்தது சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி.

முன்னர், தென்னாபிரிக்காவின் எய்டன் மார்க்ரம் அந்த அணியின் தலைவராக இருந்தார். இந்த நிலையில், ஐ. பி. எல். அணி ஒன்றுக்கு முதன்முறையாக பட் கம்மின்ஸ் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அணித் தலைவராக கம்மின்ஸ் நியமிக்கப்பட்டமையை சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி தன் சமூக ஊடகப்பக்கத்தில் மகிழ்ச்சியுடன் அறிவித்துள்ளது.

ஹைதராபாத் அணிக்கு இவரின் சகா டேவிட் வோர்ணர் 2015 முதல் 2021 வரை 67 போட்டிகளில் ஹைதராபாத் அணியை வழிநடத்தியுள்ளார். கம்மின்ஸ் ஹைதராபாத் அணியை வழிநடத்தும் இரண்டாவது அவுஸ்திரேலியர் ஆவார். (ஐ)




# டெவன் கொன்வே காயம் சென்னைக்கு பின்னடைவு



சென்னை, மார்ச் 05

ஐ. பி. எல். 2024 தொடர் தொடங்குவதற்கு முன்னதாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணி பெரிய பின்னடைவை சந்தித்துள்ளது. அந்த அணியின் நியூஸிலாந்து அதிரடி வீரர் டெவன் கொன்வே காயம் காரணமாக தொடரின் ஆரம்ப கட்டப் போட்டிகளை தவறவிடலாம் என்று கூறப்படுகின்றது.

அண்மையில் நடந்த நியூஸிலாந்து - அவுஸ்திரேலிய இருபது - 20 தொடரின்போது காயமடைந்தார். இதையடுத்து அவருக்கு விரலில் சத்திர சிகிச்சை செய்யப்படவுள்ளது.

இந்நிலையில், அவர் 8 வாரங்கள் ஓய்வு பெறுவது அவசியம் என்று நியூஸிலாந்து சபை தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், எதிர்வரும் மார்ச் 22ஆம் திகதி ஐ. பி. எல். தொடர் ஆரம்பமாகிறது. 21 போட்டிகள் முதல் கட்டமாக நடைபெறவுள்ளன. இந்தியாவில் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல் பற்றிய அறிவிப்பைத் தொடர்ந்து ஏனைய போட்டிகள் அறிவிக்கப்படும்.

இந்த நிலையில், கடந்த 2022ஆம் ஆண்டு ஒரு கோடி இந்திய ரூபாய்க்கு கொன்வேயை சென்னை சுப்பர் கிங்ஸ் வாங்கியது. கொன்வே 23 போட்டிகளில் விளையாடி 46.12 என்ற சராசரியுடன் 924 ஓட்டங்களை அவர் குவித்திருந்தார்.

எனவே, இப்போது கொன்வே இல்லாதது அந்த அணிக்கு இது பெரும் பின்னடைவாகப் பார்க்கப்படுகின்றது. (ஐ)

# நதன் ஓய்வுபெறும்போது தலைமையை துறப்பேன்

## பட் கம்மின்ஸ் தெரிவிப்பு

வெலிங்டன், மார்ச் 05

அணித் தலைவர் பதவியிலிருந்து விலகுவது குறித்து அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் பேசியுள்ளார்.

நியூஸிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் வெற்றியில் அவுஸ்திரேலிய அணியின் நதன் லயன் பெரும் பங்கு வகித்திருந்தார். அதுபற்றி கூறிய அவர், " நதன் லயன் கிரிக்கெட் விளையாடுவதற்கு தடையாக இருப்பது அவரது உடல்நலம். அவர் முழு உடற்தகுதியுடன் இருந்தால் ஆண்டுக்கு 10 டெஸ்ட் போட்டிகளில் அல்லது அதற்கு மேற்பட்ட போட்டிகளில் கண்டிப்பாக இடம்பெறுவார். அவர் வருகிற 2027 ஆம் ஆண்டு வரை டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாட வேண்டும் என விரும்புகிறேன்.

அவர் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறும்போது நான் எனது தலைமைப் பதவியிலிருந்து விலகி விடுவேன் என அவரிடம் நான் ஏற்கனவே கூறியுள்ளேன். ஏனென்றால், அது எனது வாழ்க்கையை மேலும் எளிதாக்கும் - என்றார். (ஐ)



# டுபாய் ரென்னிஸ் ஹம்பர்ட் சம்பியன்

டுபாய், மார்ச் 05

டுபாயில் நடந்த ஆடவருக்கான ரென்னிஸ் சம்பியன்ஷிப் இறுதியாட்டத்தில் பிரான்ஸின் யுகோ ஹம்பர்ட் வெற்றி வாகை சூடினார்.

இறுதி ஆட்டத்தில், போட்டித்தரவரிசையில் 5ஆம் இடத்திலிருந்த ஹம்பர்ட் 6-4, 6-3 என்ற செற்களில், போட்டித் தரவரிசையில் 7-ஆம் இடத்திலிருந்த கஜகஸ்தானின் அலெக்ஸாண்டர் பப்லிக்கை வென்றார்.

இதன் மூலம், நடப்பு பருவகாலத்தில் தனது 2ஆவது சம்பியன் பட்டத்தை வென்றுள்ளார் ஹம்பர்ட். (ஐ)



## மகளிர் பிறீமியர் லீக் கிரிகெட்:

# குஜராத்தை 25 ஓட்டங்களால் வீழ்த்தியது டில்லி கப்பிட்டல்ஸ்




பெங்களூர், மார்ச் 04

குஜராத் ஜெயண்ட்ஸ் அணிக்கு எதிராக பெங்களூரில் நடந்த மகளிர் பிறீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் 25 ஓட்டங்களால் வெற்றியீட்டிய டில்லி கப்பிட்டல்ஸ் அணி புள்ளிகள் நிலையில் முதலாம் இடத்துக்கு முன்னேறியுள்ளது.

அணித் தலைவி மெக் லெனிங்கின் அரைச் சதம், ஜெஸ் ஜோனாசன், ராதா யாதவ் ஆகிய இருவரின் துல்லியமான பந்துவீச்சு என்பன டில்லியின் வெற்றியில் ஆதிக்கம் செலுத்தின.

முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி கப்பிட்டல்ஸ் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது.

மெக் லெனிங் 55 ஓட்டங்களையும் அலிஸ் கெப்சி 27 ஓட்டங்களையும் அனாபெல் சதலண்ட் 20 ஓட்டங்களையும் ஷிக்கா பாண்டி ஆட்டமிழக்காமல் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மெக்னா சிங் 37 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய குஜராத் ஜயண்ட்ஸ் 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்று தோல்வி அடைந்தது.

ஏஷ்லி காட்னர் மாத்திரம் திறமையாகத் துடுப்பெடுத்தாடி 40 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் ராதா யாதவ் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் ஜெஸ் ஜோனாசன் 22 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களையும் கைப்பற்றினர். (ஐ)

# பாரிஸில் காசா போர் நிறுத்த உடன்பாடு:

# இரு நாட்டு தீர்வு இனியும் சாத்தியமா?

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**




எதிர்வரும் மார்ச் 10 ஆம் திகதி இஸ்லாமியர்களின் புனித ரமழான் மாதம் ஆரம்பமாகவுள்ள நிலையிலேயே போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கான இராஜதந்திர முயற்சிகளும் தீவிரம் அடைந்துள்ளன.

தற்போது காசா போரில் இஸ்ரேலின் கவனம் இறுதியாக ரஃபாவின் பக்கம் திரும்பியுள்ளது. எகிப்தின் எல்லையான ரஃபாவில் ஹமாஷ் போராளிகளைகளை அழிக்கப் போவதாக இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

பாரிஸில் புதிய ‘போர் நிறுத்த’ உடன்படிக்கை எட்டப்பட்ட நிலையிலும், இஸ்ரேல் எகிப்திய எல்லையில் உள்ள ரஃபாவில் அதிகவனம் செலுத்துகிறது. காசாவில் மார்ச் 4 ஆம் திகதிக்குள் போர் நிறுத்தம் வர சாத்தியம் என அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

இந்த புதிய உடன்பாடு ஏற்பட்டால், 40 நாள் போர் நிறுத்தம் அமலுக்கு வரலாம். காசாவில் ஹமாஸ் பிடித்து வைத்திருக்கும் பணயக்கைதிகளும் விடுவிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இஸ்ரேல்-ஹமாஸ் இடையேயான போரில் காசாவில் உள்ள மக்கள் பெரும் தவிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். இஸ்ரேல் தாக்குதலில் காசாவில் குழந்தைகள், பெண்கள் உள்பட முப்பது ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

காசாவில் போர் நிறுத்தத்தைக் கொண்டுவர அமெரிக்கா, கட்டார், எகிப்து ஆகிய நாடுகள் முயற்சித்து வருகின்றன. இதில் ஹமாசின் கோரிக்கைகளை ஏற்க இஸ்ரேல் மறுத்தது. இதனால் போர் நிறுத்தம் ஏற்படுவதில் இழுபறி நீடித்து வருகிறது. இந்நிலையில், மார்ச் 4 ஆம் திகதிக்குள் நிறுத்தம் ஏற்படும் என எதிர்பார்கப்படுகிறது. அதேவேளை இஸ்ரேல் தீவிர தாக்குதல் நடத்தி வருகிறது.

**பாரிஸில் புதிய ‘போர் நிறுத்த’ முயற்சி:**

பாரிஸில் புதிய ‘போர் நிறுத்த’ முயற்சிக்கு இடையே மத்திய காசாவில் இஸ்ரேல் பயங்கர வான் தாக்குதலை தொடர்கிறது. காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவதற்கான புதிய சுற்று பேச்சுவார்த்தை பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் பெப்ரவரி 23 ஆரம்பமானது.

காசாவில் போர் நிறுத்தம் ஒன்றை எட்டுவது மற்றும் அங்கு பிடித்து வைக்கப்பட்டிருக்கும் பணயக்கைதிகளை விடுவிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் புதிய சுற்று பேச்சுவார்த்தைகளில் அமெரிக்கா, கட்டார் மற்றும் எகிப்து பங்கேற்றுள்ளன.




**இரு நாட்டுத் தீர்வு என்பது மேற்குலகின் பிரதான கொள்கையாக இருந்து வந்தபோதும் 1994இல் ஒஸ்லோ ஒப்பந்தம் கைச்சாத்தானது தொடக்கம் பலஸ்தீன நாடு ஒன்றை அடைவதற்கான முயற்சியில் சிறிய அளவே முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.**






எனினும் கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக எகிப்து தலைநகர் கெய்ரோவில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் முன்னேற்றம் காண தவறின. இதில் ஹமாஸ் அமைப்பின் முன்மொழிவுகளை இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு “மாயையானது” என்று நிராகரித்திருந்தார்.

இந்நிலையில் இஸ்ரேலிய உளவுப் பிரிவு தலைவர் டேவிட் பார்னீ தலைமையில் பேச்சுவார்த்தை குழு ஒன்றை பாரிஸ் அனுப்ப இஸ்ரேல் போர் அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இதன்படி பலஸ்தீன போராளிகளால் பிடிக்கப்பட்டு இன்னும் அவர்களின் பிடியில் இருப்பதாக நம்பப்படும் 100க்கும் அதிகமான பணயக் கைதிகளை விடுவிக்கும் உடன்படிக்கை ஒன்றை எட்டுவதற்கு பாரிஸ் பேச்சுவார்த்தையில் முயற்சி மேற்கொள்ளப்படவிருப்பதாக இஸ்ரேலிய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்தப் பேச்சுவார்த்தையில் அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏவின் தலைவர் வில்லியம் பர்ன்ஸ், கட்டார் பிரதமர் ஷெய்க் முஹமது பின் அப்துல் ரஹ்மான் அல் தானி மற்றும் எகிப்து உளவுப் பிரிவுத் தலைவர் அப்பாஸ் பமால் ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடுவிப்பதற்காக பேச்சு வார்த்தையாளர்களுக்கு பரந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது என்று இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் யோவ் கலன்ட் கூறி இருந்தார்.

மறுபுறம் ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மைல் ஹனியே மூன்று நாள் நீடித்த பேச்சுவார்த்தைகளுக்குப் பின் எகிப்தில் இருந்து புறப்பட்டுச் சென்றதாக அந்த அமைப்பு வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹனியே தலைமையிலான இந்த தூதுக்குழு எகிப்து உளவுப் பிரிவு தலைவர் அப்பாஸுடன் பல சுற்று பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டதாக அந்த அமைப்பு கூறியது.




மீதமுள்ள பணயக்கைதிகளை விடுவிப்பது மற்றும் நீட்டிக்கப்பட்ட மனிதாபிமான போர்நிறுத்தத்தை உருவாக்கும் ஒப்பந்தத்தைப் பெற முயற்சிப்பதில் நாங்கள் தீவிர கவனம் செலுத்தியுள்ளோம் என்று அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளிங்கன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

எனினும் பேச்சுவார்த்தையில் போதிய முன்னேற்றம் எட்டப்படாததற்கு இஸ்ரேலே காரணம் என்று ஹமாஸ் மூத்த அதிகாரியான சமி அபூ சுஹ்ரி குற்றம்சாட்டினார். இஸ்ரேல் முந்தைய போர் நிறுத்த முன்மொழிவில் சில வாரங்களுக்கு முன் ஒப்புக்கொண்ட விதிகளில் இருந்து பின்வாங்கியதாகவும் அவர் குறிப்பிட்டார். ஆக்கிரமிப்பாளர்களான இஸ்ரேல், எந்த ஓர் உடன்பாட்டையும் எட்டுவதற்கு ஆர்வம் காட்டவில்லை” என்றார்.

**காசாவின் எதிர்காலம்?**

இதேவேளை போருக்குப் பின்னர் காசாவுக்கான திட்டம் ஒன்றை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது அமைச்சரவைக்கு சமர்ப்பித்திருப்பதாக இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதில் காசாவில் இயங்கும் ஹமாஸ் அரசுக்கு பதில் துறைசார் நிபுணர்களை கொண்ட சிவில் நிர்வாகம் ஒன்றை அமைப்பதற்கும் காசாவுக்குள் பாதுகாப்பு வலயம் ஒன்றை உருவாக்குவதற்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று ரபா எல்லைக்கடவை உட்பட எகிப்து மற்றும் காசா எல்லையை இஸ்ரேல் கட்டுப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்தை மூடுவதும் நெதன்யாகுவின் திட்டத்தில் உள்ளது.

இந்தத் திட்டத்தை பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் நிராகரித்துள்ளார். அவரது உத்தியோகபூர் பேச்சாளர் நபில் அபூ ருதைனி விடுத்திருக்கும் அறிவிப்பில் கூறியதாவது, ஜெரூசலத்தை தலைநகராகக் கொண்ட சுதந்திர பலஸ்தீன நாட்டின் அங்கமாக மாத்திரமே காசாவில் இருப்பதோடு அது அல்லாத எந்தத் திட்டமும் தோல்வியில் முடியும். பூகோள யதார்த்தத்தை மாற்றுவற்கான இஸ்ரேலின் முயற்சி வெற்றி பெறாது தஎன கூறப்பட்டுள்ளார்.

**இரு நாட்டு திட்டம் :**

பிராந்தியத்தில் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை உலகம் விரும்புவதாக இருந்தால் ஆக்கிரமிப்பை முடிவுக்



குக் கொண்டுவந்து சுதந்திர பலஸ்தீன நாட்டை அங்கீகரிக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

காசா போர், பல தசாப்தங்களாக நீடிக்கும் இந்தப் பிரச்னைக்கு தீர்வாக இரு நாட்டு திட்டத்திற்கான அழைப்பை சர்வதேச அளவில் புதுப்பித்துள்ளது. இஸ்ரேலின் நெருங்கிய கூட்டாளியான அமெரிக்காவும் இந்த அழைப்பை விடுத்து வருகிறது.

இரு நாட்டுத் தீர்வு என்பது மேற்குலகின் பிரதான கொள்கையாக இருந்து வந்தபோதும் 1990களின் ஆரம்பத்தில் ஒஸ்லோ ஒப்பந்தம் கைச்சாத்தானது தொடக்கம் பலஸ்தீன நாடு ஒன்றை அடைவதற்கான முயற்சியில் சிறிய அளவே முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

# மதுப்பழக்கம்:
# இளம் வயதிலேயே மது அருந்துவதால் ஏற்படும் அபாயகரமான பாதிப்புகள்!

நான் பல்கலைக்கழக படிப்புக்காக வீட்டை விட்டு வெளியேறுவதற்கு முந்தைய நாள் எனக்கு 18 வயதானது. பிரிட்டனில் மது வாங்குவதற்கான வயது வரம்பை நான் அப்போது கடந்திருந்தேன். எனது புதிய வீட்டிற்கு அருகில் உள்ள மருத்துவர் ஒருவரிடம் நான் சென்றபோது, வாரத்திற்கு எத்தனை யூனிட் மது அருந்துவீர்கள் எனக் கேட்டார். பிரிட்டனில் 1.5 யூனிட் என்பது, தோராயமாக ஒரு சிறிய கோப்பை அளவிலான வைனுக்கு சமம். நான் தோராயமாக “ஏழு” என பதிலளித்தேன்.



“இந்த எண்ணிக்கை இனியும் உயரும்” என சிரிப்புடன் பதிலளித்தார். அதிக மது அருந்துவது, ஆயுட்காலம் முழுவதும் பாதிப்பை ஏற்படுத்தும் என்று எனக்குத் தெரியும். ஆனால் 30, 40 அல்லது 50 வயதுடைய ஒருவருடன் ஒப்பிடும்போது எனது இளமை கூடுதல் ஆபத்துகளைக் கொண்டுவரும் என்று நான் கருதவில்லை. எல்லா பெரியவர்களுக்கும் மதுவால் ஏற்படும் ஆபத்துகள் ஒரே மாதிரியாக இருக்குமா?

மதுபானம் இளம் பருவத்தினரின் மூளையை எப்படி பாதிக்கும் என்பது குறித்து எனக்கு இப்போது தெரிந்த விஷயங்களை முன்கூட்டியே நான் அறிந்திருந்தால், நான் சற்று எச்சரிக்கையாக இருந்திருப்பேன். இளம் வயதில் மது அருந்துவது நமது அறிவாற்றல் வளர்ச்சியில் நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தும்.

இளைஞர்களிடையே மதுவின் தாக்கம் பற்றி ஆராய்ச்சியாளர்களிடம் பேசுகையில், அதுகுறித்து எனக்குத் தெரிய வந்த தகவல்கள் என்னை ஆச்சரியப்படுத்தியது. பிரிட்டன் அல்லது அமெரிக்காவைவிட ஐரோப்பியர்கள் ஆரோக்கியமான மதுப்பழக்கத்தைக் கொண்டுள்ளனர்.





மேலும் இளைஞர்களை வீட்டில் உணவுடன் மது அருந்த அனுமதிப்பது அவர்களுக்கு பொறுப்புடன் மது அருந்த கற்பிக்கிறது. ஆனால், மதுவின் தாக்கம் ஏற்படுத்தும் பிரச்னைகள் குறித்து அறிந்துகொள்வது, தங்கள் வீட்டில் மதுவை எவ்வாறு கையாள்வது என்பதைப் பெற்றோர்கள் தீர்மானிக்க உதவலாம்.

### மூளையை சென்றடையும் ஆல்கஹால்

ஆல்கஹால் ஒரு நச்சு. கல்லீரல் நோய் மற்றும் பல வகையான புற்றுநோய்கள் இதனால் ஏற்படுகின்றன. “மது அருந்தும்போது, ஆரோக்கியத்தைப் பாதிக்காத பாதுகாப்பான அளவு என்று எதுவும் இல்லை” என உலக சுகாதார மையம் கூறுகிறது.

மது அருந்துவதால் ஏற்படும் பாதிப்புகளை மட்டுப்படுத்த பல நாடுகளில் சில வரம்புகள் உள்ளன. அமெரிக்காவில் ஆண்களுக்கு ஒரு நாளைக்கு இரண்டு பானங்களுக்கு மேல் இல்லை என்றும், பெண்களுக்கு ஒரு நாளைக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பானங்கள் இல்லை என்றும் வரையறுக்கப்படுகிறது. பல நாடுகளும் இதேபோன்ற வழிகாட்டுதலை வழங்குகின்றன.

பியர் மற்றும் வைன் பொதுவாக பாதுகாப்பான பானங்களாகக் கருதப்பட்டாலும், அமெரிக்க வழிகாட்டுதலின்படி, பானத்தின் வகையைக் காட்டிலும் அதில் உள்ள ஆல்கஹால் அளவுதான் பிரச்னை. “12-அவுன்ஸ் பியரில், ஐந்து-அவுன்ஸ் அளவு கோப்பை வைன் அல்லது 1.5-அவுன்ஸ் மதுபானத்தில் இருக்கும் ஆல்கஹால் இருக்கிறது.”

பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில், மது வாங்குவதற்கான குறைந்தபட்ச வயது 18. அமெரிக்காவில் 21 வயது.

எவ்வாறாயினும், இளம் வயதினருக்கு மதுபானம் மிகவும் ஆபத்தானது என்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. இளம் பருவத்தினர் 21 வயது வரை தங்கள் வயது உயரத்தை எட்ட மாட்டார்கள், மேலும் அவர்கள் செங்குத்தாக வளர்வதை நிறுத்திய பின்னரும்கூட, 30 அல்லது 40 வயதையொட்டியவர்களின் உடலமைப்பை அடைந்திருக்க மாட்டார்கள்.

“ஒரு கோப்பை மது அருந்துவதால், பெரியவர்களைவிட இளைஞர்களுக்கு ரத்தத்தில் அதிகளவு ஆல்கஹால் சேர்கிறது” என்று மாஸ்ட்ரிச் பல்கலைக் கழகத்தின் முதுகலை ஆராய்ச்சியாளரும் மது அருந்துவதற்கான குறைந்தபட்ச வயதை உயர்த்துவது குறித்து ஆய்வு செய்பவருமான ரூட் ரூட்பீன் கூறுகிறார்.

இளம் பருவத்தினரின் ஒல்லியான தேகமும் இதற்கு ஒரு காரணம். நீங்கள் மது அருந்தும்போது, அது உங்கள் ரத்த ஓட்டத்தில் நுழைந்து உங்கள் உடலில் பரவுகிறது. ஐந்து நிமிடங்களுக்குள் அது உங்கள் மூளையை அடைந்து, பொதுவாக உங்கள் மூளையை தீங்கு விளைவிக்கும் பொருட்களில் இருந்து பாதுகாக்கும் தடையை எளிதில் கடந்துவிடும்.

“இளைஞர்கள் மது அருந்தும்போது அதன் பெரும்பகுதி அவர்களின் மூளையைச் சென்றடைகிறது. இது, இளைஞர்கள் ஆல்கஹால் நச்சுத்தன்மையைப் பெறுவதற்கான மற்றொரு காரணம்” என்று ரூட்பீன் கூறுகிறார்.

### “மோசமான நடத்தைக்கு வழிவகுக்கும்”

மண்டை ஓட்டில் ஏற்படும் மாற்றங்களையும் கவனிக்க வேண்டும். கடந்த காலத்தில், நமது பதின்பருவத்தில் நரம்பு வளர்ச்சி நின்றுவிடும் என்று கருதப்பட்டது. ஆனால் சமீபத்திய ஆராய்ச்சியின்படி, இளம்பருவ மூளையானது ஒரு சிக்கலான மறுபின்னலுக்கு உட்படுகிறது, அது குறைந்தது 25 வயது வரை முடிவடையாது.

ஒரு செல் மற்றொன்றுடன் தொடர்புகொள்ள அனுமதிக்கும் ஒத்திசைவுகளை மூளை கத்தரிக்கும்போது “கிரே மேட்டர்” எனப்படும் சாம்பல் நிற திசுக்களைக் குறைப்பது, ஆல்கஹாலின் மிக முக்கியமான விளைவுகளுள் ஒன்று என அவர் கூறுகிறார்.

மூளையில் நடத்தை மற்றும் உணர்வுகளுடன் தொடர்புடைய லிம்பிக் அமைப்பு முதலில் முதிர்ச்சியடைகிறது. நெற்றிக்குப் பின்னால் அமைந்துள்ள ப்ரீஃப்ரன்டல் கோர்டெக்ஸ் எனப்படும் முன்புறணி வளரும் வேகம் மெதுவாக இருக்கும். இந்தப் பகுதி, உணர்ச்சிக் கட்டுப்பாடு, முடிவெடுத்தல் மற்றும் சுய கட்டுப்பாடு ஆகியவற்றுடன் தொடர்புடையது.

இந்த இரண்டு பிராந்தியங்களின் வளர்ச்சியின் ஒப்பீடு, இளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்கள் ஏன் பெரியவர்களைவிட அதிக ஆபத்தைச் சந்திக்கிறார்கள் என்பதை விளக்கலாம். குறிப்பாக, உற்சாகமான பதின்ம வயதினருக்கு, ஆல்கஹால் மோசமான நடத்தை மற்றும் குற்றத்தின் சுழற்சியை உருவாக்கும்.

“அதாவது, அதிக மனக்கிளர்ச்சி கொண்ட இளம் பருவத்தினர் அதிகமாகக் குடிக்க முனைகிறார்கள், பின்னர் குடிப்பது மேலதிக மனக் கிளர்ச்சியை ஏற்படுத்துகிறது,” என்கிறார், சௌத் கரோலினா பல்கலைக்கழகத்தின் நரம்பியல் உளவியலாளர் லிண்ட்சே ஸ்குக்லியா.

இளம்பருவத்தினரின் மதுப்பழக்கம் நீண்டகால வளர்ச்சியை பாதிக்கலாம். பல ஆய்வுகள், ஆரம்பக்கால மதுப்பழக்கம் சாம்பல் நிற திசுக்கள் மிக விரைவாகக் குறைவதுடன் தொடர்புடையது என்று சுட்டிக்காட்டுகின்றன. அதே நேரத்தில் வெள்ளை நிற திசுக்களின் வளர்ச்சியும் தடைபடுகிறது,” என்கிறார் அவர்.

அறிவாற்றல் சோதனைகளில் விளைவுகள் உடனடியாகத் தெரிவதில்லை, இளம் பருவத்தினரின் மூளையில், சிக்கலைத் தீர்ப்பதற்குப் பொறுப்பான பகுதிகள் பற்றாக்குறையை ஈடுசெய்யச் சிறிது கடினமாக உழைக்கலாம். இருப்பினும் இது என்றென்றும் நீடிக்காது. ‘பல வருட மதுப்பழக்கத்திற்குப் பிறகு, மூளையில் குறைவான செயல்பாடு மற்றும் மோசமான செயல்திறன் ஆகியவற்றைக் காண்கிறோம்,” என்கிறார் ஸ்குக்லியா.

ஆரம்பக்கால மதுப்பழக்கம் மன ஆரோக்கியத்தையும் பாதிக்கலாம். மேலும் எதிர்கால வாழ்க்கையில் மதுவைத் தவறாகப் பயன்படுத்துவதன் அபாயத்தை அதிகரிக்கிறது. குடும்பத்தில் ஏற்கெனவே மதுப்பழக்கம் உள்ளவர்களுக்கு இது அதிகளவில் ஏற்படுகிறது.

### ஐரோப்பிய மதுப்பழக்கம் ஆரோக்கியமானதா?

இந்தக் கண்டுபிடிப்புகள் ஓர் இளம் பருவத்தினரின் தேர்வுகளை எவ்வாறு பாதிக்கலாம்? எப்படி, எப்போது வீட்டில் குடிக்க அனுமதிக்க வேண்டும் என்பது பற்றிய பெற்றோரின் முடிவு என்னவாக இருக்க வேண்டும்?

(16ம் பக்கம் பார்க்க)

# மதுப்பழக்கம்:...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

“முடிந்தவரை மதுப்பழக்கத்தைத் தொடங்கும் வயதைத் தாமதமாக்க வேண்டும். ஏனெனில் உங்கள் மூளை பதின்பருவத்தில் இன்னும் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது. மதுப்பழக்கத்தை தொடங்குவதற்கு முன் உங்கள் மூளை முடிந்தளவு ஆரோக்கியமாக இருக்கட்டும்,” என்கிறார் அவர்.

இந்த அறிவுரை சட்டத்தில் இணைக்கப்பட வேண்டுமா என்பது வேறு விஷயம். மது அருந்துதல் பற்றிப் பொது வெளிகளில் தாம் பேசும்போது, “ஐரோப்பிய மதுப்பழக்க மாதிரி” குறித்துக் கேள்வி எழுப்பப்படுவதாக ஸ்குக்லியா கூறுகிறார். பிரான்ஸ் போன்ற சில நாடுகளில், சிறார்களுக்கு ஒரு கிளாஸ் வைன் அல்லது பியர், குடும்ப உணவுடன் சேர்த்துக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

ஐரோப்பாவிற்கு வெளியேயும்கூட, கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் மதுவை மெதுவாக அறிமுகப்படுத்துவது இளைஞர்களுக்குப் பாதுகாப்பாக மது அருந்த கற்றுக் கொடுக்கிறது என்றும், பிற்காலத்தில் அதிகமாக மது அருந்துவதைக் குறைக்கிறது என்றும் பல பெற்றோர்கள் நம்புகிறார்கள்.

இதுவொரு கட்டுக்கதை. “ஆல்கஹாலை பயன்படுத்துவதில் பெற்றோர்கள் எவ்வளவு அதிகமாக அனுமதிக்கிறார்களோ, அந்த அளவுக்கு ஒரு சிறார் பிற்காலத்தில் மதுவால் பிரச்னைகளைச் சந்திக்க நேரிடும் என்று ஆராய்ச்சிகள் சுட்டிக் காட்டுகின்றனர்” என்கிறார் ஸ்குக்லியா. “இளமைப் பருவத்தில் மது அருந்துவது தொடர்பான கடுமையான விதிகளைப் பெற்றோர்கள் விதிப்பது மதுபழக்கம் மற்றும் அதுதொடர்பான ஆபத்தான நடத்தைகளுடன் பெருமளவில் தொடர்புடையது,” என்று ஓர் ஆய்வு



கூறுகிறது.

ஆஸ்திரியாவில் உள்ள ஜோஹன்னஸ் கெப்லர் பல்கலைக்கழக லின்ஸில் அலெக்சாண்டர் அஹம்மர் மேற்கொண்ட ஆய்வைக் கவனியுங்கள். அங்கு 16 வயதுக்கு மேற்பட்டவர்கள் சட்டப்பூர்வமாக பியர் அல்லது வையின் வாங்கலாம். கடுமையான சட்டங்கள் மது அருந்துவதற்கான விருப்பத்தை மட்டுமே அதிகப்படுத்தினால், அமெரிக்காவைவிட ஆஸ்திரியா ஆரோக்கியமான மதுப்பழக்கத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கலாம். அங்கு மது அருந்துவதற்கான குறைந்தபட்ச சட்டப்பூர்வ வயது 21. ஆனால் இது விஷயமல்ல.

இரு நாடுகளிலும் ஒருவர் குறைந்த பட்ச வயதைக் கடந்த பிறகு அதிகமாக மது அருந்துகின்றனர். “ஆனால் இந்த எண்ணிக்கை, அமெரிக்காவில் 21 வயதில் இருந்ததைவிட ஆஸ்திரியாவில் 16 வயதில் 25% அதிகமாக இருந்தது,” என்று அலெக்சாண்டர் அஹம்மர் கூறுகிறார்.

அமெரிக்கர்கள் மது அருந்துவதற்கான சட்டப்பூர்வ வயது சற்று அதிக



மாக இருப்பது, மதுபானங்களை வாங்க அனுமதிக்கப்படும்போது மிகவும் பொறுப்பான நடத்தையை ஊக்குவித்ததாகத் தோன்றியது.

“ஆல்கஹால் சட்டப்பூர்வமாக மாறும்போது, பதின்வயதினர் முன்பைவிட மிகவும் குறைவான அபாயத்திற்கு ஆளாகின்றனர்,” என்று அஹம்மர் கூறுகிறார். 16 வயதில், அத்தகைய தவறான பாதுகாப்பு உணர்வு ஆபத்தானதாக இருக்கலாம், அதேநேரம் 21 வயதில், அதிக முதிர்ச்சியடைந்த மூளை மதுபானத்தைக் கையாளுவதற்கு ஓரளவு சிறப்பாக மாறியுள்ளது.

ஐரோப்பிய மதுப்பழக்கம் ஆரோக்கியமானது என்பது முற்றிலும் உண்மையில்லை. உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, ஐரோப்பிய பிராந்தியத்தில் ஆல்கஹால் காரணமாக ஏற்படும் புற்றுநோய்களில் மிதமான ஆல்கஹால் உட்கொள்வதால் ஏற்படுகிறது என்று தரவு சுட்டிக்காட்டுகிறது.

அறிவியல் ஆதாரங்களின் அடிப்படையில், அரசாங்கங்கள் சட்டப்பூர்வ குறைந்தபட்ச வயதை 25 அல்லது அதற்கு மேல் அமைக்க வேண்டுமா? தனிப்பட்ட சுதந்திரம் பற்றிய மக்களின் கருத்துகளுக்கு எதிராக பொது சுகாதார நலன்கள் சமநிலைப்படுத்தப்பட வேண்டும் என்பதால், இது அவ்வளவு எளிதல்ல என்று நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

“ஒரு கட்டத்தில் மக்கள் தங்கள் சொந்த முடிவுகளை எடுக்க அனுமதிக்க வேண்டும்” என அஹம்மர் ஒப்புக்கொள்கிறார்.

இளம் பருவத்தினருக்கு மதுவின் அபாயங்கள் மற்றும் மதுவால் மூளையில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து சிறந்த கல்வியை வழங்கலாம் என்று, ஹாமில்டனில் உள்ள மெக்மாஸ்டர் பல்கலைக்கழகத்தில் போதைக்கு அடிமையாதல் குறித்து ஆய்வு செய்து வரும் ஜேம்ஸ் மெக்கிலாப் பரிந்துரைக்கிறார்.

நீண்ட கால உடல்நல அபாயங்களை அறிந்திருந்தும், இன்றும் நான் மது அருந்துகிறேன். ஆனால் சற்று கூடுதலாக மதுபானங்களை வாங்குவதற்கு முன் நான் இரண்டு முறை யோசிக்க இவை வழிவகுக்கலாம்.

(பிபிசி)

